
# பாரதமணி



சர்வதாரி ஸூ
சித்திரை மீ

BHARATA MANI

K.S.VENKATARAMANI

4 அணா

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நெம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள்: ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது: கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வர்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள், எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

❊

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.





மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
34, அலர்மேல்மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை, 4.

வருட சந்தா ரூபா 3

தனிப் பிரதி அணா 4

மாலை 19 | சர்வதாரி௵ சித்திரைமீ : APRIL 1948 | முத்து 4


## பொருளடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| டில்லி அரசியல் நிர்ணய சபை காரியம்—காமகோடி | 125 |
| கனம் எஸ். பஞ்சாபகேச சாஸ்திரியார்—கா. சி. வேங்கடரமணி | 128 |
| ஸோஷலிஸ்ட் கட்சி—வ. ஜி. வேங்கடாச்சாரி | 130 |
| மூவரில் முதல்வன்—எம். எஸ். சுப்ரமண்ய ஐயர் | 133 |
| கவிதை—வே. நாராயணன் | 137 |
| ஐயோ, அரக்கன் !—பெ. நா. அப்புஸ்வாமி | 139 |
| பால் அபிவிருத்தி—எஸ். இராமஸ்வாமி | 141 |
| வலைவீச்சு—இளநாக்கும் இளஷ்றநுதயமும் | 146 |
| வஞ்சம்—கீரன் | 147 |
| சாம்பான் குடும்பம்—எஸ். பத்மாஸனி | 149 |
| நான் சந்திரலேகா போய்ப்பார்த்த கதை—கா.வே. சுப்ரமண்யன் | 155 |
| நிம்மதி—ஆர். எஸ். மூர்த்தி | 157 |
| போகிற போக்கில்—மணி | 159 |


[முகப்புப் படம் : கனம் எஸ். பஞ்சாபகேச சாஸ்திரியார்]
படம் : " ஹிந்து "

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல,

# "விருந்தாளிகள் வந்திருக்கின்றனர்"

தேயிலை பானமருந்தி சம்பாஷிக்க...சம்பாஷணை ரஸமானதாக இருக்கலாம், ஆனால் டீ அவர்களுக்கு திருப்தியளிக்க முடியாது......ஏனெனில் விருந்தளிக்கும் அம்மையார் தேயிலை பானத்தை சீரமான குளிர்ந்த பாண்டத்தில் தயாரித்தார். நல்ல டீ தயாரிக்க சிரமில்லாத வெது வெதுப்பான பாண்டமே தேவை."





கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்னதென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிக செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளை பின்பற்றினால் போதும். உங்கள் பணத்திற்கு முழு மதிப்பு பெறவும் தேயிலை பானம் நறுமணம் ததும்பியிருக்கவும் இவ்விதிகளை உங்கள் மனதில் பதியவைத்து, எப்போதும் வீட்டில் இவ்விதிகளைப் பின்பற்றச் செய்வது அவசியம்.

**ஐந்து சுலபமான விதிகள்.**

1. புதியதாக எடுத்ததும் புதிதாகக் கொதித்ததுமான நீரையே உபயோகிக்கவும். 2. உபயோகிக்கும் முன் பாண்டத்தை வெதுவெதுப்பாக்கவும். 3. ஒவ்வொருவருக்கு ஒரு தேக்கரண்டி வீதமும் பாண்டத்திற்காக ஒரு தேக்கரண்டியும் நல்ல தேயிலை உபயோகிக்கவும். 4. தேயிலை கஷாயம் உபயோகிக்கும் முன் 3 முதல் 5 நிமிஷம் நன்கு ஊறவேண்டும். 5. பாலைக் கோப்பையில் சேர்த்துக்கொள்ளவும்—பாண்டத்தில் வேண்டாம்.

"தேயிலைப் பானம் - சில யோசனைகள்" என்ற இலவச புத்தகம் ஆங்கிலம், வங்காளி, ஹிந்தி, உருது, அல்லது தமிழ் பாஷையில் கிடைக்கும். கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101 நேதாஜி சுபாஷ் ரோட், தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்துப் பெறலாம்.

★

நன்கு தயாரித்த **டீ** யைப் போன்றது வேறேதுவுமல்ல.



இந்தியன் டீ மார்க்கெட்

எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

# தி வான்கார்டு பயர் & ஜெனரல்
## இன்ஷ்யூரன்ஸ் கோ. லிட்.,

**தலைமை ஆபீஸ் : 308-9, லிங்கி செட்டித் தெரு, சென்னை - 1**

●

தென்னிந்திய ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் சிறந்தது
மோட்டார் - நெருப்பு - கடல் விபத்து - இதர வகை
இன்ஷ்யூரன்ஸ் செய்யப்படும்

●

வழங்கப்பட்ட மூலதனம் : ரூ. 25 லக்ஷம்
செலுத்தப்பட்ட மூலதனம் : ரூ. 15 லக்ஷம்

●

உங்களுடைய இன்ஷ்யூரன்ஸ் பிரச்னைகளுக்கு எங்களைக் கலந்து கொள்ளவும். சாதகமான பிரிமிய விகிதங்கள்.

H. D. ராஜா,
ஜெனரல் மானேஜர்.





# பிணியாளர்களுக்கோர் தேறுதல்

மேல் நாட்டு மருந்துகளாலும் ஏனைய நம் நாட்டு மருந்துகளாலும் குணமடையாதிருக்கும் "குஷ்டம்" "படை" "மேகப்பற்று" முதலான சரும வியாதிகளுக்கு எமது

# கந்தகராஜ ரஸாயனம்

**உறுதியான பலனைக் கொடுக்கிறது**

பவுண்டு விலை ரூ. 60—0—0

வாத வியாதி, மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் முதலான எவ்வித நோய்களையும் எமது மூலிகைகளால் செய்யப்பட்ட ஔடதங்கள் கண்டிக்கின்றன.

முழு விபரங்களுக்கு :

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள் :

மானேஜர்,
ஆர்ய வைத்தியசாலை,
கோட்டைக்கல், தென் மலையாளம்


Bharata Mani—April, 1948

பாத்ருடுவின்

## பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்.

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச் சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**போலி மருந்துகளைக் கண்டு ஏமாறாதீர்கள் !**


## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

*11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்*

**கும்பகோணம் கிளை :—**
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

**திருச்சி கிளை :—**
15, புகழியபிள்ளைத் தெரு,
தெப்பக்குளம் போஸ்டு



# டில்லி அரசியல் நிர்ணயசபை காரியம்

(காமகோடி)

Constituent Assembly வருங் கால ராஜ்ய பாரத்திற்கு ஆதார தத்வங் களைத் திட்டம் வகுத்துவிட்டது.(Draft Constitution) அச்சுப்போட்டு பொதுஜனங்களின் அபிப்பிராயத்திற்கு இம்மாதம் விடப்பட்டிருக்கிறது. அதில் மத உரிமையைப்பற்றி எல்லோருக்கும் மத ஸ்வதந்திரம் கொடுக்கப்பட்டிருப் பதாக பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், பின்னால் Clause 19 Section 2-ல் ஆசார சீர்திருத்தத்திற்காகச் செய் யப்படும் சட்டங்கள் மத உரிமைகளை எவ்வளவு வேண்டுமானாலும் பாதிக்கலா மெனப் பொருள்படும்படி சொல்லப்பட் டிருக்கிறது.

இதனால் மத உரிமை கொடுக்கப்பட் டும் பிரயோஜனமில்லை.

இவ் விஷயத்தில் பொதுஜனங்களின் அபிப்பிராயம் கேட்கும் இச்சமயத் திலேயே ஒவ்வொருவரும் மத விஷயத் தில் சட்டசபை தலையிடும் தத்துவத்தை அடியோடு எடுக்கும்படிக்கு அரசாங்கத் தத்திற்குத் தெரிவித்துக்கொள்ளவேண் டும்.

ஏப்ரல் மாதம் 30 தேதிக்குள், President Constituent Assembly, New Delhi, என்ற விலாசத் திற்குத் தெரியபடுத்தவும்.

குறிப்பு :—

சட்டசபையின் மெஜாரிட்டி அபிப் பிராயப்படி நம் மதக் கொள்கைகளை அவ்வப்பொழுது மாற்றிக்கொள்வதே நம் அரசாங்கத்தின் அடிப்படை தத்துவ மானால், பாகிஸ்தான் ராஜ்யத்தில் மெஜா ரிடியான மகமதியர்கள் கேரிடையாக ஹிந்துக்களைத் துலுக்கர்களாக ஆக்கும் பாக்கிஸ்தான் தத்துவத்தை நாம் குறை கூற இடமில்லாமல் போகும். ஆகை யினால் அவ்வித தாழ்ந்த நிலைமைக்கு நமது அரசாங்கம் வாராமலிருக்கும்படி யாக அடிப்படை தத்துவ நிர்ணயம் செய் விப்பது இத்தருணத்தில் அரசாங்கத்தின் உறுப்பினர்களாகிய நம்மவரது அவசிய மான கடமையாகும்.

* * *

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு
ஸ்திரமான அஸ்திவாரம்
போடவேண்டியது
இந்த ஒரு மாதத்தில்தான்

இந்த அஸ்திவாரம் போடுவதில் நாம் எப்படி ஈடுபடலாம்?

எல்லா மக்களுடைய உடலும் உயிரும் எவ்விதக் கஷ்டமுமின்றி வாழ நாம் என்ன தொண்டு செய்யலாம்?

உடல்வாழ ஒற்றுமை பலத்தினால் ஏற் படும் பொருளும், உயிர்வாழ அறநூல் வழிவரும் அருளும் வேண்டுவன.

அரசு நல்நிலையில் இருந்தால்தான் இவ் விரண்டும் பொங்கும்.

உடல் வாழ்வது சிறிது காலமே.

உயிர் அறவழியில் நிற்பதால் அது எண்ணிறந்த காலம் பெருவாழ்வு வாழ இடமுண்டு.

* * *

அரசியல நிர்ணயசபை(Constituent Assembly)யின் பூர்வாங்க திட்டம் முடிந்துவிட்டது.

அதன் சிபார்சுகள் (Draft Constitution) மேற்படி சபையில் (Constituent Assembly) ஏறப்போகின்றன.

அவை ஏறி எந்த உருவாகித் தீர்மான மாகின்றனவோ அதைப் பொறுத்தே நம் நாட்டு வருங்கால மக்களின் உடல், உயிர் வாழ்க்கை ஏற்படப் போகிறது.

இதில் நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய காரியம் ஏதாவது இருக்கிறதா?

"பல துளி பெரு வெள்ளம்" என்ற முறையில் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சிறு கடமையிருக்கிறது.

இம்மாதம் அதைச் செய்யத்தவறினல் வாழையடி வாழையாக வரப்போகும் பிற்கால மக்களின் உயிர் வாழ்க்கைக்கு அநுகூலம் செய்யாதவர்களாவோம்.

இம்மாதம் என்ன செய்யவேண்டும்? மேற்படி சிபார்சுகள் அரசியல் நிர்ணய சபையில் ஏறுமுன் அவைகளைப் பொது ஜனங்கள் பார்த்து, பரிசீலித்து ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுமாறு ராஜன் பாபுவைத் தலைமையாகக்கொண்ட அரசியல் நிர்ணய சபை நம்மை வேண்டிக் கொண்டிருக்கிறது.

அது அந்த சிபார்சுகளையெல்லாம் திரட்டி ஒரு ரூபாய் விலையில் ஒரு புத்தக ரூபமாக வெளியிடப்பட்டிருக்கிறது. Superintendent Government Press, Madras. என்ற விலாஸத்துக்கு எழுதினல் கிடைக்கும். வருங்கால அரசாங்கம் நடத்தப்படவேண்டிய முறைக்கு ஆதாரமான தத்துவங்கள் அரசியல் நிர்ணய சபையில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றன.

அவ்வாதார தத்துவங்கள் ஜனங்களுக்கு க்ஷேமகரமானதென்று ஜனங்கள் நினைக்கிறார்களா?

அல்லது வேறு எவ்விதமாக யிருக்க வேண்டுமென்று பொதுஜனங்கள் கருதுகிறார்கள், என்பதை அவை ஊர்ஜிதமாவதற்குமுன் நம்மைக் கேட்கிறார்கள்.

நாம் ஒவ்வொருவரும் பதில் எழுதியனுப்பக் கடமைப்பட்டுள்ளோம்.

"உடல்", "பொருள்", "ஆவி" என்ற மூன்றில் மக்களின் உடலையும், பொருளையும் ரக்ஷிக்க வேண்டி அநேக ஆதாரதத்துவங்களை எழுதியிருக்கிறார்கள்.

அவைகளைச் சட்ட அனுபவநிபுணர்களைக் கொண்டு மனதிற்கு வாங்கிக் கொள்ளவேண்டும்.

உடலும் பொருளும் ஒவ்வொரு நாளும் கோடிக்கணக்காக மடிகின்றன.

அதிலும் சென்ற இரண்டு வருஷங்களாக நடக்கும் கோரத்தை எவராலும் சகிக்கமுடியவில்லை.

இந்த கோரமில்லாமல் சாந்தமான காலத்திலும்கூட இவ்விரண்டும் மயானக் கரைகளுடன் நின்றுவிடுகின்றன.

நாம் செய்யும் கெட்டது நல்லது இவைகளெல்லாம் நம் ஆவியுடன் செல்கின்றன. அவ்வாவியாம் உயிர் எக்காலத்திலும் க்ஷேமமாயிருப்பதற்காக வேண்டிய நற்காரியங்களைச் செய்வதற்காகவே உடலும் பொருளும் உபயோகப்படுகின்றன.

உயிருக்கு நன்மை தேடுவதில் சாதனமாகவே உடல், பொருள் இவைகளின் ரக்ஷையை உபயோகப்படுத்தவேண்டும்.

உயிரின் சாச்வத க்ஷேமமே நமது நோக்கமெனக் கொள்ளாமல், உடலையும் பொருளையும் ரக்ஷிப்பது மாத்திரமே மக்களின் நோக்கமாகவோ, அரசாங்கத்தின் நோக்கமாகவோ இருந்தால், என்றென்று இருந்தாலும் அழியப்போகும் இவ்வுடலும் பொருளும் அழிந்தாலும் ஒன்றே இருந்தாலும் ஒன்றே. ஆதலால் உயிருக்கு க்ஷேமகரமாக வைதிக சமயத்தை சோழ பாண்டிய அரசர்கள், ஸ்ரீராமர், விக்கிரமாதித்திய, போஜ அரசர்கள் இவர்களைப்போல் ரக்ஷிப்பதோ, அல்லது கடைசி பக்ஷமாக விக்டோரியா மகாராணியைப்போல் தலையிடாமலாகவாவதிருப்பதோ, மத விஷயத்தில் அரசாங்கத்தின் ப்ரதிக்ஞையாக யிருக்கவேண்டும். மேல்கண்டபடி அரசாங்க மிருக்கவேண்டுமென்று மக்களின் ப்ரதிக்ஞையாக யிருக்கவேண்டும்.

மக்களின் சமூக சக்தியே அரசாங்கம். இன்றேனும் என்றேனும் இப் ப்ரதிக்ஞையை சாதித்தே தீருவது என்று ஒவ்வொருவரும் ப்ரதிக்ஞை செய்து

கொண்டு, அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டிய தத்துவத்தை அரசாங்கத்துக்கும் இம்மாதத்திலேயே அறிவிக்க வேண்டும்.

உயிருக்கு க்ஷேமகரமான நன்மை எது? தீமையென்பது எது? இதைத் தீர்மானிப்பது மனிதனின் புத்தி போகும் போக்கா? இதைப் பற்றிப் பகவான் எங்கேயாவது தீர்மானம் சொல்லியிருக்கிறாரா?

பகவான் சொல்லியிருக்கிறார்.

பாரத யுத்தத்தில் தேரில் குதிரைகளை ஓட்டிக்கொண்டு பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்த கீதையில் 16-வது அத்யாயத்தில் 24-வது பாடலில் சொல்லியிருக்கிறார்.

“ஆதலால் செய்யவேண்டிய காரியம் இன்னது, செய்யக்கூடாத காரியம் இன்னது என்பதை தீர்மானிப்பதில் உனக்கு சாஸ்திரம் ப்ரமாணமாகும். சாஸ்திர விதிகளை அறிந்து இவ்வுலகத்தில் காரியத்தைச் செய்யக்கடவாய்”

தற்சமயம் அரசியல் நிர்ணய சபையில் ஒவ்வொரு ஆத்மாவின் க்ஷேமத்திற்காக ஏற்பட்ட மத தத்துவத்தில் என்ன ஆதாரத்தை கைக்கொண்டிருக்கிறார்கள்?

இதைத் தெரிந்து கொண்டாலல்லவா நாம் நம் அபிப்பிராயத்தை அவர்களுக்கு தெரிவிக்க முடியும்? மேற்படி சபையால் வெளியிடப்பட்டுள்ள திட்ட புத்தகத்தில் (Draft Constitution) பாகம் மூன்று மனிதரின் மூலாதார உரிமையைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

அதில் சொல்லப்பட்டிருக்கிறவரை ஒவ்வொரு மதத்திற்கும் பூர்ணமாக பாதுகாப்புக் கொடுப்பதாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மதத்திலுமுள்ள தனித் தனிசமூகங்கள்கூட தங்கள் தங்கள் அனுஷ்டானங்களோடு வாழ உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது இப்படியே இருந்துவிட்டால் ராமராஜ்யம் தான்.

ஆனால் பின்னர் மதத்திற்குக் கொடுக்கப்பட்ட உரிமை எல்லாம் ஆசார சீர்திருத்தத்திற்காகச் செய்யப்படும் சட்டங்களுக்கு எதிராக நிற்காது என்று பொருள்படும்படி சொல்லியிருக்கிறார்கள்.

இவ்விதம் பின்னால் சொல்லிவிட்டதிலிருந்து முன்னாலே வெகு ஆடம்பரமாக வழங்கப்பட்ட மத உரிமை விலையில்லாமல் போய் விடுகிறது. கொடுத்தும் ஒன்றுதான், கொடுக்காமலிருந்தும் ஒன்றுதான்.

அவரவர்கள் ஆத்மார்த்தமாக செய்யும் அனுஷ்டானங்களில் எந்தக் காரணத்தைக் கொண்டாவது சட்டசபைகள் தலையிடுவதற்கு விதை விதைத்தாய் விட்டது.

மத விஷயங்களில் சட்டசபைகள் பிரவேசிக்கலாமென்று விட்டுவிட்டால் மத உரிமை ஏது?

சட்டசபைகளில் எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தக் கக்ஷிவருமோ, அதுவும் இப்போது சொல்வதற்கு இல்லை.

* * * *

ஆதலால், மத விஷயத்தில் நமக்கு சாச்வதமான ஆத்மார்த்த க்ஷேம விஷயத்தில் செய்யவேண்டியது இன்னது, செய்யகூடாதது இன்னது, என்பதை சட்டசபை தீர்மானிக்கும் ஆபாசத்தை ஒழித்து, பகவான் கீதையில் அருளியபடி, மதத்தில் அரசாங்க சட்டசபை எவ்வளவும் தலையிடாமலிருக்குமாறு அவர்கள் நம் அபிப்பிராயத்தைக் கேட்கும் இம் மாதத்திலேயே அவர்களுக்கு நாம் தெரிவிக்கவேண்டும்.

இப்படித் தெரிவிப்பது ஆயிரம் கோவில்களுக்கு அஸ்திவாரம் நாட்டுவதை விட அதிக சாச்வதமான அஸ்திவாரம்.

# கனம் எஸ். பஞ்சாபகேச சாஸ்திரியார்

கா. சி. வேங்கடரமணி

ஜட்ஜ் முத்துசாமி அய்யர் 1831-ம் வருடத்தில் பிறந்தார். கனம் எஸ். பஞ்சாபகேச சாஸ்திரியார் 1891-ம் வருடத்தில் பிறந்தார். கிருஸ்துவ சாகாப்தத்தை கையாண்டு பயன்படுத்தி வரும் ஆங்கில வருட எண்ணிக்கை கணக்குப் பிரகாரம் 1831-ம் வருடத்திற்கும் 1891-ம் வருடத்திற்கும் ஓர் ஒற்றுமை அல்லது உறவு நமது கண்களுக்கோ, காதுகளுக்கோ புலன்படாது. ஆனால் ஹிந்துக்களின் - நாம் இப்பொழுது அநேகமாய் மறந்துபோன - 60 வருஷ சக்ர நாமாவளிப்படி 1831-க்கும் 1891-க்கும் ஓர் அன்பும், இசையும், ஒற்றுமையும் உண்டு. இரண்டும் கரவருஷமாகும்.

ஆகையால் ஜட்ஜ் முத்துசாமி அய்யரும் கனம் எஸ். பஞ்சாபகேச சாஸ்திரியாரும் கரவருடத்தில் பிறந்தவர்கள்—குடும்பத்தில் குரு, சிம்மத்தில் சனி. தவிர, இருவரும் பிறந்த லக்னமும் கும்பமேயாகும். ஆகையால் லக்கினத்தில் குரு, ஏழில் சனி :—திக்பலம் பெற்ற இந்த இரண்டு கிரஹமே ராஜயோகத்தை கொடுக்கக் கூடியதல்லவா ?

ஆனால் ஒரு கேள்வி. நமது நாட்டின் அரசியல் நிர்ணய அமைப்பும் அதன் பொதுக் கொள்கைகளும் வலுத்ததா ? அல்லது சூர்ய சந்திராள், சுக்கிரன் குரு, செவ்வாய் சனி வலுத்ததா ? ஆராய்ச்சி முறையில் நடைமுதலே உண்மையுடன் பார்த்தால் கிரகங்களில் யோக பலாபலன்கள் கூட சென்னை மந்திரிசபையின் வகுப்பு ஜி. ஓ. க்கு கட்டுப்பட்டதாகத் தெரிகிறது. சில வகுப்பில் பிறந்த ஜாதகமானால் உச்சமடைந்த சுக்கிரன் கூட நமது அரசியல் நவாம்சத்தில் நீச மடைகிறது. நீசபலத்தைத்தான் கொடுக்கிறது. இன்னும் சில வகுப்பில் பிறந்த ஜாதகமானால் நீசமடைந்த சுக்கிரன் கூட அரசியல் நவாம்சத்தில் உச்சாம்சம் ஏறி ராஜயோகத்தைக் கண்ணைமூடிக் கொண்டு கொடுக்கிறது. இதை நாம் பிரத்யக்ஷமாய் அனுபவிக்கிறோம். நாம் சுயேச்சையினால் அடைந்த வெற்றியில் இது முக்கியமான ஒரு வெற்றி. கிரகத்தையும் வெல்லக்கூடிய ராஜதந்திர சக்தி! போலீஸ் படை மாத்திரம் அல்ல, நவக்கிரஹங்களும் நமது மந்திரி சபையின் கைவசம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. சனிப்ரீதி இனி செய்ய வேண்டியதில்லை. கதை வளருகிறது—ஜோஸ்யத்தில் எனக்குப் பால்யத்தில் ஏற்பட்ட ருசியால்! ஆனால் ஒரு நீதிபதியைப் பற்றி எழுதும் போதாவது ஒரு கட்டடக்கத்துடன் எழுத வேண்டாமா ?

இந்த குழப்பத்தில் கனம் எஸ். பஞ்சாபகேச சாஸ்திரியாருக்கு ஜட்ஜ் பதவியே கிடைக்காமல் தட்டிப்போய் விடுமோ என்று நான் பயந்தது உண்டு. கிடைத்த வரையில் நாட்டிற்கு க்ஷேமம் தான். அதிர்ஷ்டம்தான். ஹைக்கோர்ட்டுக்கும் மேன்மைதான்.

* * * *

கனம் எஸ். பஞ்சாபகேச சாஸ்திரியாரை சுமார் 30 வருடங்களாக நான் நன்கு அறிவேன். ஹைக்கோர்ட்டில் வக்கீல்கள் கூடும் அறையில் எஸ். ஸத்திய மூர்த்தி அய்யரும், எஸ். பஞ்சாபகேச சாஸ்திரிகளும், அந்தக் கூட்டத்திற்கு இரண்டு கண்களாக இருபது வருடகாலம் ஜொலித்துக் கொண்டு வந்தார்கள். தொழில் தலைவர்கள்கூட கேசுகளை விட்டு விட்டு 'அஸோஸியேஷனில்' இவர்கள் என்ன விஷயங்கள் களிப்புடன், கூர்மையுடன், ஹாஸ்ய விகடத்துடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள், இன்றைய தினம் யார் காலைவாரி விடுகிறார்கள் என்பதைக்கேட்க அவாவுடன் வருவது வழக்

கம். என்னைப்போல் 'கேஸ்' இல்லாவதற்களின் அவாவைக் கேழ்க்க வேண்டுமோ? டிபனுக்கு சமத்துவமான திருப்தி அளிக்கும் உணவு இருவர்களின் சுவை பெருகிய ரசிகமான பேச்சுத்தான்.

எஸ். ஸத்தியமூர்த்தி பேச ஆரம்பித்தால் அது 'மெஷின் கன்' (Machin-gun) போல் பொழிந்து கொண்டேயிருக்கும். தங்கு தடைகிடையாது. நேர்ப்பாய்ச்சல். கையை (நாக்கையும்) தவறி நீட்டினவனுக்கு ஒரே வெட்டு, துண்டு. முதல் சிகிச்சை (First aid) கூட கிடையாது. பஞ்சாபகேச சாஸ்திரியாரின் வழி வேறு. மெஷின் கன் (gun) னையோ, பெரிய பீரங்கியையோ அது இஷ்டம் போல அட்டகாசம் செய்யக் கொஞ்சகாலம் தான் அனுமதித்து, ஒதுங்கி நிற்பதுபோல் சட்ட புஸ்தகத்தில் முழுகி நின்று, திடீரென்று அந்த பீரங்கியைச் சரியான சமயத்தில் குறிபார்த்து சுட்டு, அதை உடைத்து மௌனம் சாதிக்கும்படி (அல்லது டிபனுக்கு எழுந்துபோகும்படி அல்லது ஏதோ கேசு கோர்ட்டில் திடீரென்று எடுத்துவிட்டது போல் போகும்படி) ஒரு நிமிஷத்தில் செய்து விடுவார். அழிப்பது எல்லாம் ஹாஸ்ய ரூபமாகவே இருக்கும். விணையிராது. அசாத்திய சமர்த்தும், விகடமும், புத்தியின் கூர்மையும், ஊக்கமும் ஞாபகசக்தியும் கலந்து அது ஒருதனி கலைபோல் நிற்கும். அடிபட்டவருக்கும் காயமிருக்காது. ஷொட்டு கொடுத்தாற்போல் இருக்கும்!

ஸத்தியமூர்த்தியும், சாஸ்திரியும் சேர்ந்து உள்ள இடத்திற்கே எப்பொழுதும் ஒரு தனி மகிமை, சாந்நித்தியம் உண்டு. இரண்டு பேருக்கும் பிறரைக் கவரும் சக்தி (Personal magne-tism) உண்டு. அதிலும் சாஸ்திரியாரின் சக்தி ஓர் தனி அமைப்பு. முகத்தில் அழியாத தேஜஸ்; முன்னோர் செய்த காயத்ரி மந்திரத்தின் பலன். காவிரியாற்றின் ஆடிச் சுழல்போல் புத்தி கூர்மையையும், தெளிவையும் வீசும் கண்கள், சாந்த சுபாவம், போட்டியிலே ஆசையில்லாத தன்மை, ஸ்வதர்மத்தை தினசரி செய்யும் மனோபாவம், ஆடம்பரத்திலோ விளம்பரத்திலோ இச்சையில்லாத நோக்கம். இவ்வுபர்தர குணங்களை இயற்கையிலேயே பெற்ற பாக்கியசாலி சாஸ்திரியார். ஆங்கிலப் படிப்பாலும் அதை அழிக்க முடியவில்லை.

இவர் சம்பாஷணை வழியே ஓர் தனி வழி, ஓர் அழகு. சோர்ந்த மனதையும் உயிர் மூட்டிவிடும். சுழல்பந்து அடிப்பவர்களின் (Spin bowlers) பந்து போல் வேகத்துடன் சமர்த்துடன் செல்லும் வழியே தெரியாமல் பறந்துபோய் கிட்டியைக் கீழே தட்டிவிடும். எதிராளியின் மனதையும், வழக்கையும் முன் தெரிந்து, அவர் அதை சொல்லு முன் வாயுவேகமாய் இவர் முன்னிட்டு ஓர் வெடி மருந்திட்டு, அதை உல்லாசத்துடன் அழிப்பார். ரத்தம் வாராமல் மாட்டுக்குத்தார் போடுவது போல்! சாஸ்திரியாரின் மூளையின் வேகத்தை மின்னலுக்கு ஒப்பிடலாம். நான் பார்த்தவர்களுக்குள் இது விஷயத்தில் இவருக்கு சமனாக ஒப்பிடக்கூடியவர் ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் (Sir. Stafford Cripps).

இவருடைய உபர்தர மேதையையும், சட்டத்திலுள்ள ப்ரக்ஞையையும், பாண்டித்யத்தையும், முழுத்திட்டம் வெளிப்படுத்த கூடிய சௌகரியங்களும், அன்பும், ஆதரவும் காலா காலத்தில் இவருக்கு பாரில் (Bar) பூர்ணமாய்க் கிடைக்கவில்லை. ஆனால் ஜட்ஜ்பதவியில் இவருக்கு வேண்டிய அளவு வளர இடம் இயற்கையாகவே பதவியிலிருந்து கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். வக்கீல் தொழிலில், தெரியாதவர் பண முடிச்சையும், கக்ஷி முடிச்சுகளையும் கூலிபோர்ட்டர் போல் சுமந்து வாங்கிக்கொண்டு, நேர் வழியில் வாதாடும் நியாயத்தையும் கையாண்டு, இவர் கோர்ட்டில் வக்கீலாகப் பழகும்போது, மாமியார் உள்ள வீட்டிற்கு வந்த புது நாட்டுப் பெண் போலவே, தனக்குத் தொழிலில் தலைமை வந்தும், தங்குதடையுடன், ஓங்கி அடிக்காமல் நடந்து வந்தார். வக்கீல் தொழிலிலேயே இவருக்கு வெறுப்பு இல்லாவிட்டாலும்

# சோஷலிஸ்ட் கட்சி

ஏ. ஜி. வேங்கடாச்சாரி

காங்கிரசுக்குள் வேலை செய்துவந்த ஸோஷலிஸ்டுகள் அதிலிருந்து விலகி தனிக் கட்சி அமைத்துக் கொண்டுவிட்டனர். தேச விடுதலை கைகூடிவிட்டதால் சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொண்டு சமுதாய நீதியை ஸ்தாபிக்க உழைப்பதுதான் இனிச் செய்யவேண்டிய வேலை. இதைப்பற்றி கருத்து வேற்றுமைக்கே இடமில்லை. எவ்வளவு வேகத்தில், எந்த வழி முறைகளை வகுத்துக் கொண்டு, இந்த லட்சியத்தை அடைய முயலவேண்டும் என்பதைப் பற்றித்தான் அபிப்பிராய பேதமிருக்க முடியும். நமது சமுதாயத்தை ஜனநாயக சோஷலிஸ்ட் குடியரசாக உருப்படுத்துவது என்பது ஸோஷலிஸ்ட் கொள்கை. "கூட்டுறவு காமன்வெல்த்" என்ற வர்க்க விவகாரமில்லாத சமுதாய சிருஷ்டியே காங்கிரஸின் லட்சியம். எனினும், இந்த லட்சியத்தை அடைவதற்கு முழு மூச்சுடன் உழைப்பது காங்கிரஸினால் அசாத்தியம் என்று சோஷலிஸ்டுகள் கருதுகின்றனர். ராஜீயத் துறையில் கலப்பற்ற முதலாளித்துவ அமலை வற்புறுத்துவோர் முதல், பிற்போக்கே உருவான பல சமஸ்தான அதிபர்கள் குழுவரை, பலதரப்பட்ட பொருளாதாரக் கருத்தினரை காங்கிரஸ் தன்னுள் அடக்கிக் கொண்டு வேலை செய்யவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு பெரிய பணக்காரர்களும் தொழில் பிரமுகர்களும் அவர்களை ஆதரிக்கும் செல்வாக்குள்ள ராஜீயவாதிகளுந்தான், காங்கிரஸ் ஸ்தாபனத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ செல்

---

ஓர் வித இயற்கை லஜ்ஜை (Shyners) இருந்தது என்று நம்புகிறேன். ஜட்ஜ் பதவிக்கு இந்த இருட்டுள் வழி தவிர வேறு வழி இல்லையே என்று அதைக் கைப்பற்றியிருந்தாற்போல்! இப்பொழுது ஜட்ஜ் பதவி சாஸ்திரியாரின் சுபாவத்திற்கும், அறிவிற்கும், மேதைக்கும் ஓர் உண்மையான ஸ்வராஜ்ய வெற்றிதான்.

கனம் பஞ்சாபகேச சாஸ்திரியார் தொழில், வாழ்க்கை எல்லாவற்றிலும் ஓர் உயர்தர சீலர். பிறரை நிந்திக்கும் சுபாவமே கிடையாது. நெறியுடன் வாழ்வை எந்தத் துறையிலும் நடத்த வேண்டும் என்ற அவா. அந்த அவாவையும் பூர்த்தி செய்திருக்கிறார். ஸர் எஸ். வரதாசாரியாரைப் போல் மனோபாவ அமைப்பு—நம்முடைய தினசரி கர்மாவை முடிந்தவரையில் வஞ்சனையில்லாமல் செய்வோம். அதன் பலப்ராப்திக்கு நமக்கு அதிகாரம் கிடையாது. வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரியே! போட்டியில் ஈடுபட்ட நாகரீகத்தில் இந்த மனப்பன்மையை காப்பாற்றுவதோ, வளர்ப்பதோ மிக்க கஷ்டம். இதை சாஸ்திரியார் இயற்கையாகவே கொண்டு வந்திருக்கிறார்.

5 வருஷம் முன் கனம் பதஞ்சலி சாஸ்திரியாருக்குச் சென்னை ஹைக்கோர்ட் ஜட்ஜ்ஆனவுடன் அவர் டில்லிக்கு டிக்கட்டு வாங்கியிருக்கிறார் என்று பாரதமணியில் எழுதினேன். அதுபோலவே கனம் பஞ்சாபகேச சாஸ்திரியாருக்கும், இறைவன் அருள் புரிந்து காலக்கிரமத்தில் இவர் டில்லியில் சுப்ரீம் கோர்ட்டில் (Supreme Court) ஜட்ஜ் பதவியை அடைவார் என்ற பூர்ண நம்பிக்கை எனக்கு உண்டு,

வாக்குள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். எனவே, காங்கிரஸின் "கூட்டுறவு காமன்வெல்த் ஐக்கியம்" வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் இருக்க முடியுமென சோஷலிஸ்டுகள் கருதுகின்றனர். எனவே, தாங்கள் எதிர்க்கட்சியாக, கட்டுப்பாட்டுடன் சோஷலிஸ்ட் தத்துவ அடிப்படையில் வேலை செய்வது அவசியமாகிவிட்டதென அதன் தலைவர்கள் கூறுகின்றனர்.

சோஷலிஸ்டுகள் தனியாகப் பிரிந்து வேலை செய்வதற்கு இது தருணமல்ல என்று கருதும் தலைவர்களில் நமது பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேருவும் ஒருவர். பொருளாதாரப் பிரச்னைகளின் பேரில் பிளவுபடாமல், ஐக்கிய முன்னணியாக முக்கிய சக்திகள் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்பது அவரது ஆசை. அத்தகைய கூட்டு முயற்சி போற்றத்தக்கதே. எனினும் அது வெற்றிபெற வேண்டுமாயின், பொது மக்களிடையே வேர்விட்டுள்ள எல்லா கட்சிகளும் ஒன்றுபட்டு வேலை செய்வது அவசியமாகிறது. தொழிலுற்பத்திப் பெருக்கே பிரதானம் என்று கருதப்படுவதும் இயல்பே. ஆனால் அதைச் சாத்தியமாக்குவதற்குத் தொழிலாளரிடம் செல்வாக்குள்ள கட்சியினரை ஐக்கியக் கூட்டிற்குள் இணைத்துச் செல்ல முயல்வதுதான் முறைமையும் விவேகமுமாகும். முக்கியமாக கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் கட்சியினர்தான் இத்தகையோர். கம்யூனிஸ்ட் கட்சிக்குத்தான் இத்துறையில் அதிகமான செல்வாக்கு இருந்து வந்திருக்கிறது என்பது வெளிப்படை. சிற்சில விடங்களில் சோஷலிஸ்டுகளுக்கும் தொழிலாளரின் கணிசமான ஆதரவு உண்டு. எனவே, ஒருதிட்ட அடிப்படையில் சேர்ந்து வேலை செய்வதற்கு இக்கட்சிகளுடைய ஒத்துழைப்பை முதலில் நாடியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாதடுடன், கம்யூனிஸ்டுகளைப் பகைவர்களென்று கருதி வேலை செய்து வந்ததால்தான் தேசத்தில் பல துறைகளிலும் நெருக்கடிகள் தோன்றிவிட்டன. உண்மையான ஐக்கிய முன்னணி என்பன அசாத்தியமாகி விட்டது. கம்யூனிஸ்ட்களிடமுள்ள பகைமை, நாளடைவில் தொழிலாளரையே பகைச்சக்தி என்று முதலாளிகளும் சர்க்கார்களுங்கூட கருதக்கூடியவாறு வளர்ந்துவிட்டது. இதற்குப்பின், சோஷலிஸ்டுகளால்கூட, தொழிலாளரின் நம்பிக்கையை இழக்காமல் வேலை செய்வது அசாத்தியமாகிவிட்டது. காங்கிரஸின் பெயரால் சட்ட சபையில் அங்கம்வகிப்போரில் பலரும், சில மந்திரிகளுங்கூட, கடமை தவறி, சுயநலமிகளாகிவிட்டதால், சோஷலிஸ்டுகளின் வெளியேற்ற முடிவு துரிதப்பட்டது என்றுகூட சொல்லலாம்.

இந்தச் சூழ்நிலையில் சோஷலிஸ்டுகள் வெளியேறி தனிக் கட்சியாகப் பாடுபடுவது முற்றிலும் நியாயமானதே. இதன் விளைவாக, காங்கிரஸ் ஸ்தாபனத்திலுள்ளோரின் பொறுப்புணர்ச்சி சிறிது அதிகமாகக் கூடும்.

லஞ்ச ஊழல்களைக் குறைக்கப் பாடுபடுவது அவசியமென காங்கிரஸ் தலைமையினரும் பிரதமர்களும் நினைக்கக் கூடும். செல்வாக்குள்ள முதலாளி கோஷ்டிகள் இட்டதே சட்டம் என்ற நிலைமை நீடிக்கலாகாதென்ற உணர்ச்சி, சாமான்ய காங்கிரஸ்காரர்களிடை தோன்றக்கூடும். அறிவும் அனுபவமும் ஆற்றலும் நேர்மையும் யோக்கியப் பொறுப்பும் சட்டசபையினருக்கு அவசியமென்ற எண்ணம் வலுக்கலாம். இவையெல்லாம் உருவானல், காங்கிரஸ் நல்ல "லிபரல்" (மிதவாத) கட்சியாகப் பணியாற்ற முடியும். ஆனால் இவையெல்லாம் உருப்படுவது இடதுசாரி சக்திகள் தேசத்தில் திரட்டும் பலத்தையும் அந்தரங்க சுத்தியுடன் வேலை செய்வதையுமே பொறுத்திருக்கும். இந்தக் கண்ணோட்டத்துடன் சோஷலிஸ்ட் கட்சியின் வாக்குறுதிகளையும் அதன் சாத்திய சாதனங்களையும் நிதானித்து முடிவுகட்டவேண்டும்.

சோஷலிஸ்ட் கட்சி புதிதல்ல. 1935ம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டது. தேசமெங்கும் வேகமாய் வியாபித்து, லட்சிய

வாதிகளான காங்கிரஸ் யுவர்களைக் கவர்ச்சித்தது. ஆனால் தலைமையினரின் தெளிவற்ற போக்கும், உறுதியற்ற வழிமுறைகளும் அதன் அமோக வளர்ச்சிக்குப் பெரிய இடையூறுகளாயிருந்தன. இதன் காரணமாக, சோஷலிஸ்டுகளில் பெரும்பான்மையோரை, கட்சி பலமும், வழிமுறையும், உறுதியும் உள்ள கம்யூனிஸ்டுகள் வலித்துக் கொண்டனர். யுத்த ஆரம்பத்தில் சோஷலிஸ்ட் கட்சி பீஹாரிலும் ஐ. மா. விலுந் தவிர நாட்டின் மற்றப் பகுதிகளில் அஸ்தமித்துவிட்டதாகவே சொல்லலாம். யுத்த ஆரம்பத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியை கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் சேர்ந்து தீவிரமாக மக்களிடையே வளர்த்தனர். ஆனால் ரஷ்ய யுத்தப்பிரவேசத்துக்குப்பின் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை மாறிவிட்டதால், சோஷலிஸ்ட் கட்சி மட்டுமே விடுதலைப் போரில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட இடதுசாரி சக்தியாக விளங்கியது. அதன் தலைவர்கள் துணிச்சல் மிகுந்த வீரச் செயல்களைப் புரிந்து பெயரும் புகழும் அடைந்தனர். ஆனால் அதற்கேற்றவாறு சோஷலிஸ்ட் கட்சியின் செல்வாக்கு வளரவில்லை. சோஷலிஸ்ட் இயக்கத்துக்கு ஸ்தாபன ரீதியில் சேர்ந்துள்ள தொழிலாளர், கிருஷிகர், லட்சியவாதிகளான யுவர்கள் போன்ற சக்திகளே முக்கியமானவை. 1942-ம் ஆண்டில் சட்டரீதியாக வேலை செய்யும் வசதி பெற்ற கம்யூனிஸ்டுகள் இவற்றிலெல்லாம் பரவலாக வேரூன்றிவிட்டனர். 1942-ம் ஆண்டில் "துரோகமிழைத்துப் பகைவனுடன் சேர்ந்தவர்கள்", "மாஸ்கோவுக்குத் தாளம் போடுகிறவர்கள்" என்ற பிரசார பீரங்கி அவர்கள் மீது கடுமையாகத் திருப்பப்பட்டது. மிகப் பெரிய அளவில் தேசமெங்கும் நடைபெற்ற இப்பிரசாரத்தால் இங்குமங்கும் சில தொழிலாளர் இயக்கத்தினரும், கிருஷிக ஊழியர்களும், கம்யூனிஸ்ட் செல்வாக்குள்ள ஸ்தாபனங்களிலிருந்து வெளியே வந்து காங்கிரஸ்காரர்களாகவும் சோஷலிஸ்டுகளாகவும் வேலை செய்தனர். இவற்றினால் கம்யூனிஸ்ட் பலம் சற்று குறைந்தது. ஆனால் விஷம்போல விலைவாசிகள் உயர்ந்தது, தொழிலாளரின் பிரம்மாண்டமான போராட்டங்கள் முதலியன, தம் செல்வாக்கை மீட்டு, மீண்டும் உயர்த்திக் கொள்வதற்கு கம்யூனிஸ்டுகளுக்குப் பயன்பட்டன. இந்நிலையில் தொழிலாளர் இயக்கத்தில் பிளவுகளை உண்டு பண்ணி, இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸை தோற்றுவித்து, அதிகாரத்தில் காங்கிரஸ் இருப்பதன் காரணமாகவுள்ள வசதிகளின் மூலம், தொழிலாளர் கிருஷிக இயக்கங்களிலிருந்து கம்யூனிஸ்டுகளை நெருக்கி வெளியேற்றுவதை காங்கிரஸ் தனது கொள்கையாக்கிக் கொண்டுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சியின் ராஜீய வேலைகளும் தேசமெங்கும் கிரியாம்சையில் தடைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த சூழ்நிலையில் புது முயற்சியில் சோஷலிஸ்ட் கட்சி இறங்கியுள்ளது. அது பாமர மக்களின் ஆதரவை ஒருவாறு பெற்றிருக்கிறது. ஆனால் ஸ்தாபன ரீதியில் அதற்கு தொழிலாளர் கிருஷிகர்களிடையே இன்னும் போதிய பலம் ஏற்படவில்லை. இருந்தபோதிலும், சட்டசபையில் கணிசமான ஸ்தாபனங்களைப் பெறுவதன்மூலம், கட்சியை நிலைநிறுத்தலாமென அதன் தலைவர்கள் நினைக்கின்றனர். காங்கிரஸிடமுள்ள அதிருப்தி, கம்யூனிஸ்டுகளிடமுள்ள அறுவறுப்புக் காரணமாக பொது மக்களில் பலர் தங்களை ஆதரிப்பர் என்பது அவர்களுடைய நம்பிக்கை. சுமாரான எண்ணிக்கையில் சட்டசபை ஸ்தாபனங்கள் கிடைக்கலாம். ஆனால், கம்யூனிஸ்டுகளுடன் ஒரு பொது ஏற்பாடு இல்லாமல், சோஷலிஸ்ட் இயக்கத்தை வளர்க்க ஜெயப்பிரகாஷ் கோஷ்டியினரால் இயலுமெனத் தோன்றவில்லை. கம்யூனிஸ்டுகளைப் போலவே சோஷலிஸ்டுகளையும் காங்கிரஸில் செல்வாக்குள்ளவர்கள் நடத்தத் தயங்கமாட்டார்கள் என்பது ஜெயப்பிரகாஷ் அறியாததல்ல.

# மூவரில் முதல்வன்

எம். எஸ். சுப்ரமண்ய ஐயர்

சிறைக்கு உள்ளேயே விசாரணை! வெளியே நடத்தத் துணிவு இல்லை! அன்னியர் உள்ளே வரக்கூடாது. எதிரியும் வக்கீலும் தந்தையுமே உள்ளே வரலாம். பொதுஜனங்கள் தலைகாட்டக்கூடாது. நவாப் தர்பாரும் ராவண தர்பாரும் பிச்சை வாங்க வேண்டும்.

வழக்கின் சாரம் யாது? எதிரிகள் கொலை புரிந்தனர்; கொள்ளையடித்தனர்; வெடிகுண்டு வீசினர்; சதி செய்தனர்; அரசுடன் போராடக் கருதினர் என்பதாம். குற்றம் மெய்யானல், தீவாந்தர சிட்சை! இல்லாவிட்டால் தூக்கு மேடை!

காமுகன் கையில் சிக்கிய கற்பரசிக்குக் கதியுண்டோ? கள்வன் கண்ணில் பட்ட பொக்கிஷத்துக்கு மீட்சி உண்டோ? ராஜாங்கம் தொடுத்த வழக்கு, போலீஸார் நடத்தும் கேஸ், ராஜீய வாதியின்மீது வல்லடி வழக்கு, இவற்றின் முடிவு எப்படியிருக்கும்?

1930-ம் வருஷக் கடைசியில் கிளம்பிய ராஜீய வழக்கு! லாகூர் சிறைக்குள்ளே நடக்கிறது. நரகத்திலே, ஐயோ என்று இரங்குவார் யார்? சிறைக்குள்ளே போலீஸின் வதையைக் காண்பார் யார்? கண்டால் அல்லவோ ஏன் என்ற கேள்வி!

போலீஸாரின் வதை ஒருபக்கம்! சிறை வார்டர்களின் சீறல் ஒருபக்கம்! அதிகாரிகளின் ஆணவம் ஒருபக்கம்! அரசாங்கத்தின் பக்கபலம் ஒருபக்கம்! எதிரிகள் என்ன செய்வர்? மனவலி ஒன்றே அவர்களுக்குத் துணை!

சிறைக்குள்ளே நடக்கும் விசாரணைத் தலத்துக்கு வர, எதிரிகள் மறுத்தனர். இதில் அதிகாரிகளுக்குப் பரம சந்தோஷம். ஏன்? விசாரணைத் தலத்துக்கு எதிரிகள் வந்தால், சித்திரவதை அம்பலமாகும்; கோரக்கொடுமையும் புலனாகும்.

எதிரிகள் வாராமல், விசாரணையை நடத்துவது எப்படி? அக்கறையில்லை. வழக்கை விசாரித்து முடித்துவிடுங்கள், என்று பஞ்சாப் அரசாங்கம் பெரிதும் விரும்பியது. ஆனல் கோர்ட்டார் இணங்கவில்லை. அதன்மேல் அரசாங்கம் என்ன செய்வது?

எதிரிகள் இல்லாமலேயே விசாரணையை நடத்தி முடிக்கவேண்டும், இதற்கு அதிகாரம் அளிக்கவேண்டும் என்று அம்மாகாண சட்டசபையை அரசாங்கம் கேட்டுக் கொண்டது. 'கெட்டாலும் கெட்டான் பையன், சாஸ்திரத்தோடு கெட்டான்!' என்பதுபோல் நடக்கப் பார்த்தது அரசங்கம்! சட்டசபை சம்மதிக்கவில்லை.

துரிதமாக விசாரணை நடக்கவேண்டுமே. ராஜப்பிரதிநிதி ஓர் அவசரச் சட்டம் பிறப்பித்தார். அவசரச் சட்டத்தை யார் ஆட்சேபிக்க முடியும்? விசாரணை வெகு துரிதமாய் நடந்தது. எதிரிகளும் முதலில் கோர்ட்டிலே ஆஜர் ஆயினர்.

ஒருநாள் அக்கோர்ட்டின் முன்னிலையிலேயே எதிரிகளைப் போலீஸார் அடித்தனர், புடைத்தனர், கைக்கு விலங்கும் போட்டனர்! நீதிபதிகளில் ஒருவர் அது கண்டு துயர்கொண்டார். அவ்வளவு தான்! வாய்திறந்து பேசவோ கண்டிக்கவோ வகையில்லை!

அதன்மேல், கோர்ட்டுக்கு வர எதிரிகள் மறுத்தனர். எதிரிகளில்லாமலேயே விசாரணை நடந்தது. இது என்ன நீதி! அவசரச்சட்டத்தின் அந்நியாய அநீதி! வேறென்ன விளம்புவது! விசாரணையும் ஒருவாறு முடிந்துவிட்டது. தீர்ப்புக் கூற வேண்டியதுதான் பாக்கி. மரண தண்டனை என்றனர் சிலர்; தீவாந்தர சிட்சை என்றனர் சிலர்; சுட்டுக்கொன்று

போடவும் அவசரச்சட்டம் பிறக்ுமோ என்றனர் சிலர்.

பொதுமக்களின் மனநிலை அங்ஙன மிருக்க, எதிரிகளிலே ஒருவரின் மன நிலை எப்படி? பாருங்கள். பத்திரிகை நிருபரொருவர் லாகூர்ச் சிறையிலே அந்த எதிரியைக் கண்டார்; கைபெடுத் துக் கும்பிட்டார்; பின்பு பேசியிருந் தார்! அந்நிருபர் கூறியுள்ளவிவரம் இது:

“அந்த எதிரி வீராதி வீரர்! விழுமிய புருஷர்! சாவைத் துரும்பென மதிப் பவர்! ஒரு சமயம் அவரைக் கண்டேன்; விசாரணை தீர்ந்துவிட்டது. தீர்ப்புச் சொல்லவில்லை. வழக்கின் முடிவு என் னகும்? என்று அவரை வினவினேன்.

“வழக்கின் முடிவா? சந்தேகம் வேண் டாம். தூக்குத்தண்டனைதான் விதிப்பர். நிச்சயம் இது” என்று பதில் சொன்னர் அவர்! அப்போது அவர் முகத்தில் ஓர் ஒளி கண்டேன்; மலர்ச்சியும் பார்த் தேன். மந்தகாசமும் நோக்கினேன்.

அதுகண்டு என் மனம் விண்டது; உடலம் சிலிர்த்தது; துக்கம் மேலிடவே நான் நகைத்தேன்! என் நகைப்பின் கருத்தை அவர் உணர்ந்துகொண்டார். உடனே என்ன சொன்னர் தெரியுமா?

“நண்ப! மனத்தில் வாட்டமேன்? உடம்பில் துடிப்பும் ஏன்? சாவு என்பது சகஜந்தானே! அதற்கு ஏன் அஞ்ச வேண்டும்? சாவுக்கு அஞ்சினல், சுதந் திரத்துக்குப் பாடுபட முடியுமா? தேச சேவகத்தில் இறங்கியபோதே, தூக்கு மேடையில் இறக்க நேரும் என்று கொண்டு விட்டேன். தூக்குமேடையில் சாக என் மனம் பூரிக்கின்றது” என்றார்.

நானே அது கேட்டுத் திடுக்கிட்டேன். சாவு என்றால் எவனும் அஞ்சுவான். அவரோ தன் மனம் பூரிக்கிறது என் கிறர். மனம் பூரிக்கிறதா? என்ன இது! என்று வியப்பும் துடிப்பும் ததும்ப அவரைக் கேட்டேன். அதற்கு அவர்,

“அன்ப! ஆம். மனம் பூரிக்கிறது! புதிய தேசத்துக்குப் போக ஒருவன் புறப்படின், அத்தேசம் எப்படியிருக்கும்; அதில் என்னென்ன புதுமை இருக்கும்; பார்க்கவேண்டும் என்று துடிப்பான் அல்லவா? அவ்விதமே நானும் ஆவல் கொண்டுள்ளேன்” என்றுரைத்தார்.

“மேலும், இந்த உலகத்தை நான் பார்த்தாகிவிட்டது! மறுஉலகம் எப்படி இருக்கிறது, என்று பார்க்கவேண்டாமா? இஃதே என் ஆவலுக்கும் துடிப்புக்கும் காரணம்” என்று வெகு இலேசாகக் கூறினர்.

அது கேட்டதும் நான் திடுக்கிட் டேன். திக்பிரமை கொண்டேன். தேம்பினேன். ஆ! ஆ! அவர் வீர வாலிபர்! அதுமட்டுமா? தத்துவஞானி யுமாம் என்று வியந்தேன். மகிழ்ந் தேன்.

நிருபரின் வாக்கு அங்ஙனமிருக்க அவ்வீர இளைஞனது மனப்போக்கை மேலும் பார்ப்போம். 1931-ம் வருஷம் மார்ச்சு மாதம் 23-ந் தேதி மாலை மூன்று மணிக்கு லாகூர்ச் சிறையிலே திடீரென எல்லாப் போக்குவரத்துக்களும்நின்றன. அவ்வீர திலகத்தினுக்கும் சரி, அவரது சகாக்களுக்கும் சரி, அதுபற்றி ஒன்றும் தெரியாது. ஆயினும், தூக்குமேடையில் சாகவேண்டியதுதான் என்று அவர் களுக்குத் தெரியும். அஃதே அவர்களின் முடிவுமாம்.

சாகத் துணிந்தோர் சாவு நேரும் நேரத்தை எதிர்பார்த்திரார்! வழக்கம் போல் அவர்கள் முகமலர்ச்சியுடன் இருந்தார்கள். அகத்தில் மகிழ்ச்சி இருந் தால்தானே, முகத்தில் மலர்ச்சி தோன் றும்! மறுநாள் காலையில் தங்களைத் தூக்கிலிடலாம் என்பதே அவர்களின் நினைப்பாம்.

மாலை ஆறு மணிக்குத்தான் கைதிகளை அறைக்குள் தள்ளிப் பூட்டுதல் சிறை யின் வழக்கம். அன்றே, வழக்கத்துக்கு விரோதமாக, முன்னதாகவே கைதிகளை அறைக்குள் தள்ளிப் பூட்டினர், அச் சிறை அதிகாரிகள். அதுகண்டு, நமக்கு இன்று சுதினம் போலும், என்று அவ் வாலிபர் கருதா நின்றனர்.

அவ்வேளை மாஜிஸ்டிரேட் என்ன, சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜென

ரல் என்ன, சிறை டாக்டர் என்ன முதலிய அதிகாரிகள் முன்புறமுள்ள பெரிய வாயிற் புறத்தை விடுத்து, வேறு வாயில் வழியே அச்சிறைக்குள் புகுந்தனர்.

தூக்குமேடையில் ஏற்றுமுன்னம், டாக்டர் வந்து பார்ப்பார். மாஜிஸ்டிரேட்டும், கோர்டின் தீர்ப்பு எனது தீர்ப்பு அன்று, என்று சொல்லுவார். மாஜிஸ்டிரேட் வந்து வாய் திறக்குமுன், வீர வாலிபன் விளம்பியது யாதெனில் :

" மாஜிஸ்டிரேட் அவர்களே ! நீர் மிகவும் பாக்கியசாலி ! சுதந்திரப் போராட்டத்தில் உயிர்துறக்கும் வீரர் எங்ஙனம் தூக்குமேடையில் தாவி ஏறுவர் ? தூக்குக் கயிற்றை எங்ஙனம் கட்டி முத்தமிடுவர் ? என்பதை நாங்கள் காட்டப்போகிறோம். நீரும் கண்குளிரக் கண்டு களிக்கலாம் !"

அம்மாற்றம் கேட்டதும், மாஜிஸ்டிரேட் திகைத்துப் போனார். சிறிது நேரம் மரம்போல் அசைவற்று நின்றார். வீர வாலிபரையும் அவரது இரு சகாக்களையும் அறைக்குள்ளிருந்து வெளியே கொணர்ந்தனர் வார்டர்கள்.

உடனே அச்சிறைக்கூடத்தின் நாலு பக்கங்களிலிருந்தும், " புரட்சி நீடூழி வாழ்க ! ஏகாதிபத்யம் ஒழிக ! ஏழை மக்கள் என்றும் வாழ்க !" எனும் கோஷங்கள் ஒரே முகமாக எழுந்தன ; வானையும் முட்டின.

மூன்று வாலிபரும் தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். முன்னே துப்பாக்கி தாங்கிய வீரர் ! பக்கவாட்டிலே, உருவின கத்தி தரித்த சிப்பாய்கள் ! பின்னே ஆயுதபாணிகளான ஸோல்ஜர்கள் !

தூக்குமேடைக்குப் போகும் மூவரின் முக விலாசத்தை என்னென்று சொல்லுவது ? மணவறையை நோக்கும் மணமகனைப்போன்ற முகவிலாசமா ? நெடுநாள் கழித்துப் பிறந்த வீடு செல்லும் பெண்ணின் முகவிலாசமா ? பெரும் பரிசுபெறச் செல்லும் மாணவனது முக விலாசமா ?

மூவரும் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டுமே தூக்குமேடை நோக்கிப் போயினர். அதிகாரிகளும் சிப்பாய்களும் அது கண்டு மனம் அழிந்தனர் சற்று ! மனம் களித்தனர் சிறிது ! உடல் குன்றினர். பெரிதும் ! தூக்குத் தண்டனையினால் தேசத்தில் யாது விளையுமோ ? என்று சிந்தித்தனர் சின்னேரம்.

சிறை வார்டர்களோ சித்திரப் பதுமை போல நின்றனர் ஒரு நிமிஷம் ! பின்னர் விசைகொண்ட யந்திரம்போல் இங்கு மங்கும் திரிந்தனர்.

பெருவீரமும், மிக்க மனவலியும், ஆழ்ந்த தேசபக்தியும் வாய்ந்த அரிய இளைஞரை, அழகொழுகும் இளைஞரை, ஆண்மையின் வடிவான இளைஞரை, அற்புதமான இளைஞரை உயிர்வாங்குவது என்றால், யார்தான் திகையார் !

தூக்குமேடையைக் கிட்டியதும், மூவரும் அதில் தாவி யேறினர். பரிவீரன் தன் குதிரைமீது தாவி ஏறுவது போலவேயிருந்தது ! சிறைச்சாலைகளின் மேலதிகாரி அது நோக்கி உள்ளம் உடைந்தான் ! அவன் உயிரோ ஊசலாடியது.

சம்பளம் வாங்கும் வரையில் சேவகம் செய்தே தீரவேண்டும். சேவகத்தின் தன்மையையும் பான்மையையும் நினைத்து என்ன பயன் ? பாழான உடம்பை வயிற்றின் கொடுமையால் நாழியரிசிக்கு விற்கும் நிலைமை விசித்திரம் ! வயிற்றுப் பிழைப்பு என்பது பலவகைப்படும் அல்லவா ?

தூக்குக்கயிற்றைக் கழுத்தில் மாட்டிச் சுருக்கிடுமுன், சம்பிரதாயமாகச் சில காரியங்கள் நடக்கும். அவையெல்லாம் கிரமப்படி நடந்தேறின.

மேடைமீது மூவரும் வரிசையாக நிறுத்தப்பெற்றனர். அவ்விதமே அவர்கள் அழகாக நின்றனர். வீர வாலிபன் தன் சகாக்களுக்கு நடுவே நின்றான். இருவரையும் கட்டியணைத்து முத்தமிட்டான் ! மேலுலகில் சீக்கிரம் சந்திப்போம் என்றான் ! ஆம் ! ஆம் என்றனர் இருவரும் !

பின்பு கறுப்புப் பை கொண்டு சிரத்திலிருந்து கழுத்து வரையில் அவர்களை மூடினர். தூக்குக் கயிற்றையும் அவர்கள் கழுத்தில் மாட்டினர். காதலியைக் காதலன் முத்தமிடுவதுபோல், மூவரும் அக்கயிற்றை முத்தமிட்டனர்.

“அன்னையே! அருமை இந்தியாவே! பாரத மாதாவே! உன் பாதகமலம் சேவிக்கிறோம். உன் பொன்னடியைப் பூசிக்கிறோம். எங்கள் மனமே பூஜைக்குரிய மலர்! சிவந்த ரத்தமே அபிஷேக நீர்! ஆவியே நிவேதனம்! அருள் புரிக!” என்றனர் மூவரும்.

அப்பால் ஒருவன், “நாம் மூவரும் ஒரு நிமிஷ நேரமே பிரிந்திருப்போம். பின்னரோ, ஒன்று சேர்ந்து, ஆஸாத், பகவதி சரணர், யதீந்திரதாஸ் ஆகிய அன்பர்களைச் சந்தித்து, மேலுலகிலே நமது மத்தியக் கமிட்டியின் கூட்டத்தை நடத்தலாம்!” என்றான்.

அங்கிலேயிலே தூக்குமேடையில் மூவரும் நின்றிருந்த பலகையை அதிகாரிகள் தட்டிவிட்டனர்; அப்பலகை அப்பால் போய்விட்டது. போய் விடவே, மூவரும் அம்மேடையிலே தொங்க நேர்ந்தது. கணநேரத்துக்கெல்லாம் அவர்களின் உடலம் சற்றே ஊசலாடிற்று.

நாற்பது நிமிஷங்களுக்குப் பிறகு பிரேதங்களைச் சுருக்கிலிருந்து கழற்றி இறக்கினர் அதிகாரிகள். தகனத்துக்கு அவற்றை எடுத்துச்சென்றனர் அதிவிரைவாக. வீரர் மூவர் அங்ஙனம் முடிந்தனர்!

1931-ம் வருஷம் மார்ச்சு மாதம் 24-ந்தேதி நமது பாரதபூமிபதைபதைத்தது. பூகம்பம் நேர்ந்தால் பூப்பரப்பு அடியோடு மாறும். மக்களின் மனத்திலே கம்பம் தோன்றியவுடனே பலரும் நிலை கலங்கினர்; நெஞ்சு சுழன்றனர்; உடல் குலைந்தனர்; உள்ளத்தே குமுறினர்!

ஸ்ரீராமபிரான் வனவாசம் போன காலத்தில் அயோத்தியிலே மாடும் கன்றும் அலறியழுதன; கருவிலிருந்த சிசுக்களும் கதறின, என்றார் ஒரு புலவர்! அவ்விதமே இமயம் முதல் குமரி வரையில் கதறாதார், கலங்காதார், கையைப் பிசையாதார், பல்லைக் கடியாதார், பரக்க விழியாதார் கிடையாது!

“மூவரும் வீரத்தியாகிகள் என்று முடிசூடிவிட்டனர். அம்மூவரும் சுதந்திரத்துக்காகவே உயிர் துறந்தனர். அது கண்டு தேச சேவையில் நாம் முன்னையிலும் அதிகமாக முனைவோமாக!” என்றார் மகாத்மா காந்தி!

“அந்தோ! அந்தோ! என் துயரம் சொல்லி முடியாது. மூவரின் தேசபக்தி மிக மிக உன்னதமானது. அன்னாரின் அரிய தேசாபிமானம், பிரமாதமான வீரதீரம், ஈடிலா உணர்ச்சி, இணையிலா ஆன்மசக்தி நமக்கு வழிகாட்டுமாக!” என்று கரைந்தார் தர்மாத்மா மாளவியா!

“எனக்குப் பேசவே முடியவில்லை. துக்கம் வந்து என் நெஞ்சை அடைக்கின்றது. மூவரின் தேசாபிமானத்தை நான் முற்றிலும் அறிவேன். அந்த இளைஞரைக் காக்க நம்மால் ஆகவில்லையே!” என்று கூறிக் கண்ணீர் வடித்தார் பண்டித ஜவஹர்லால் நேரு!

சுகதேவ், பகத்சிங், ராஜகுரு மூவரும் வாழ்க!

“இறந்துபோன தேசபக்தரை நாம் உண்மையில் கொண்டாடும் மார்க்கம் யாது? நாம் பரிசுத்த புருஷராக விளங்க வேண்டும். தீவிர தேச சமூகசேவைக்கு நம்மை அர்ப்பணம் செய்யவேண்டும்” இது மகாத்மாவின் திருவாக்கு!

# க வி தை

வே. நாராயணன் எம். ஏ., எம். எல்.

வனிதையாற் பயனென்
கவிதையாற் பயனென்
அடிவைத்த மாத்திரத்தே
உள்ளங்கவராத
கவிதையாற் பயனென்,
வனிதையாற் பயனென்?

மேற்கண்ட கருத்துடைய சுலோகம் ஒன்று வடமொழியில் உள்ளது. 'பத வின்யாஸ மாத்திரத்திலே உள்ளத்தைக் கவர்கின்றவளே வனப்புடையவள், பதங்களின் வைப்பு முறையாலேயே உள்ளத்தைக் கவர்கின்ற கவிதை உண்மைக் கவிதை' என்று அந்தச் சுலோகம் சிலேஷையாலே கவிதையின் சிறப்பினை நன்கு விளக்குகின்றது. எடுத்த அடியிலே மனதைக் களிப்பிக்கும் பாடலே 'பாடல்' என்னும் பெயர்க்கு உரியது.

'பாடல்' எவ்வாறு இருந்தால், கேட்போரைப் பிணிக்குந்தகையதாக இருக்கும்? பாடலின் சரீரமாகிய யாப்பிலே யாதொரு குற்றமும் இருக்கக்கூடாது விசேஷ ஸௌந்தர்யம் வாய்க்கா விட்டாலும் குரூபியாக இல்லாவிட்டால், அவ்வுருவத்தைக் காண்போர் அருவருக்க மாட்டார்கள். அது போலவே, சிறந்த கருத்தழகு அமையாவிட்டால், யாப்பிலக்கணங்கள் அமைந்த பாடலைக் கேட்போர் விரும்பிக் கேட்பார்கள். அங்கஹீனம் இருந்தால் அழகிய பெண் என்றாலும் ஆடவர் கண்ணெடுத்துப் பாரார்; அவ்வாறே, பாடல்களிலே மகிழ்ச்சியுறுவோர் உறுப்புக்குறையான பாடலைப் புறக்கணிப்பார்கள்.

இரண்டாவதாக, பாடலுக்கு இன்றியமையாதது 'குணம்' எனப்படுவது. தண்டியாசிரியர் பாடலுக்குரிய குணங்களைப் பத்தாக வகுப்பர். அவை யாவன:—

செறிவே தெளிவே சமநிலை இன்பம்
ஒழுகிசை உதாரம் உய்த்தலில் பொருண்மை
காந்தம் வலியே சமாதி
என்பனவாம்!

இவை பத்தும் மகளிர்க்குரிய நாண் [illegible] குணங்களைப் போல்வன. நாண், ம[illegible] அச்சம், பயிர்ப்பு இவையில்லா[illegible] பெண் என்பது பொருந்[illegible] அவ்வாறு இச் செய்யுட் கு[illegible] கமையாத பாடலும் [illegible] பாராட்டுதற்கு உரியதன்[illegible]

கடைசியாக, பாட[illegible] அணிகள் நல்லுருவமும[illegible] முடைய நல்லாளுக்கு அ[illegible] மகிழ்வது போன்று, கவிஞனு[illegible] பெற்றெடுத்த கவிதைக்கு நல்லுருவமு[illegible] நற்குணமும அமைந்துள்ளதைக் கண்டு நல்லணிகளைக் கொண்டு அவளை அலங்கரிப்பதுபொருத்தமே.

மேற்கூரிய மூன்று லக்ஷணங்களுள் எது இன்றியமையாதது என்பதையும் உத்தமக் கவிதை எது, மத்திமக் கவிதை எது, அதமக் கவிதை எது என்பதையும் இராமாயணக் கதையிலே வருகின்ற மூன்று பெண்டிரால் விளக்கலாம். விசேஷ ஸௌந்தர்யமுடையவள் என்று சொல்ல இயலாதென்றாலும், கௌஸல்யை சாமுத்ரிகா லக்ஷணங்கள் அமைந்த அங்கங்களையுடையவள். தாய்மை, கற்பு, அன்பு பொறுமை முதலிய பல நற்குணங்களாலும் சிறந்து விளங்குபவள்; இந்திரனைப் பெற்றெடுத்த அதிதியைப்போல, இராமனைப் பெற்றதால், நன்மகன் என்னும் நல்லணியையுடையவள். இவளை முதன்மையான பாடலுக்கு உவமை கூறலாம். கைகேயி அழகுமிக்கவளாய் மாசற்ற மேனியளாய் விளங்கினும், கர்வம்

பொறுமை, ஓரம் முதலிய தியகுணங்களால், அன்பு, தாய்மை, கற்பு முதலியவற்றிலே குறைந்தவளாகிய குற்றமுடையவள். அணிகளாற் சிறப்பளிக்கப் பெறினும் இவள் இடைப்பட்ட பாடலுக்கே உவமையாதற்கு உரியவள். கடைத்தரமான பாடலிலே குணங்கள் அமைந்திருக்கமாட்டா ; குணங்களினும் அழகும் அணிகளுமே விஞ்சியிருப்பன. கடைப்பட்ட பாடலிலே யாப்பிலக்கணமும் இராது ; பத்துக்குணங்களிலும் ஒன்றேனும் காணப்படாது ; அணி... மட்டும் மிகுந்தனவாகி சரீரக்...லேயும் தீர்க்குணங்களையும் அதி...் காட்டுவனவாக இருக்கும். ...மை பலவகை அணிகளை ...கொண்டு பரதன் முன் சம... வந்த கூனியேயாம். ...கோணல் ; அருவருக்...வறு முதுகிலே ; அங்க...க்கோணலேயும் காட்டுகின்றது. நடத்தையே தீர்க்குணத்தை நன்கு விளக்குகின்றது. கைகேயி பூட்டிய நல்லணிகள் அவளுடைய கோணலேயும் கூனலேயும் குணக் கேட்டையும் இன்னும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. ஆதலால், நல்லமைப்பும் நற்குணங்களுமின்றி வெறுமனே அணிகளை மட்டும் அமைந்த பாடல்கள் நல்லோரால், இராமாயணக் கூனியைப் போல, அருவருப்போடு புறக்கணித்தற்கு உரியனவாம்.

அணிகளால் ஆகும் பயன் என்ன என்பதைக் கவிஞன் நன்கு அறிதல் வேண்டும். ஒவ்வோர் அணிக்கும் உரிய பயன் ஒன்று உண்டு. பயனைக் கருதி உபயோகிக்கும் அணியே நல்லணியாம். ஆகையால் இந்த அணியால் இக்கருத்து விளக்கப் பெற்றது என்று அறிந்து கவிஞனின் கருத்தை யுணர்ந்து இன்புறுவதே கவிச்சுவையைப் பருகுதற்கு வழி.

---


## ஒரு விஷயம்!

நாம் எவ்வளவோ விதங்களில் பணத்தைச் செலவு செய்கிறோம். ஆனால், அறிவைப் போற்றும் வழியில் செலவிடுவது அவசியம் அல்லவா?

ஆம்—'பாரத மணி'க்கு ஒரு வருஷ சந்தாவைக் கட்டிவிடுங்கள். அதிகமில்லை, மூன்றே ரூபாய்தான்.

உங்கள் { அறிவு விருந்து / பொழுது போக்கு } சாதனம்

பிரபல எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்
பல ரக விஷயங்கள் வாசக நேயர்களுக்கு வழங்கப்படுகின்றன
விளம்பரங்களுக்கு அரிய சாதனம்

சந்தா விவரம் :— { ஒரு வருஷத்துக்கு 3 0 0 / தனிப் பிரதி விலை 0 4 0 }

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை

பாரத மணி காரியாலயம்,
34, அலர்மேல்மங்காபுரம், மயிலாப்பூர், சென்னை.

# ஐயோ, அரக்கன்!

பெ. நா. அப்புஸ்வாமி

ஒருநாள் அந்திப் பொழுதினிலே
ஒருவரு மில்லாத் தனிவழியோர்
சிறுவன் சென்றான் அச்சமுடன்
திடுக்கிடும் நெஞ்சே துணையாக. 1

மலையின் பின்னே தென்னொளியை
மறைத்தான் சூரியன் அப்போது
தலைமேல் உள்ள வானமுடன்
தரையும் ஒன்றாய் இருண்டதுவே.

கரிய மேகம் வானத்தில்
கவிந்து சூழக் காரிருளும்
துரித மாக வந்தங்கே
தோன்றியவழியை மறைத்ததுவே.

நிலவின் ஒளியும் வீசவிலை ;
நீல வானில் கணக்கணமாய்
நிலவும் நான்மீன் சிற்றொளியும்
நிலத்தே சிறிதும் பரவவிலை. 4

சிறுவன் அடிமேல் அடிவைத்துச்
சென்றான். திரைபோல் இருள்
[மறைக்க,
அருகில் தோன்றாப் பொருள்களினால்
அச்சம் மிகவும் கொண்டானே. 5

கீச்சிட் டாங்கோர் ஆந்தைகுரல்
கிளப்ப மனமும் பிளந்ததுவே.
மூச்சுத் திணறி, முகம்வெளுத்து,
முக்கால் உயிரும் போயிற்றே. 6

அங்கோர் நரிவந் தூளையிட,
அலறினன் சிறுவன் அதற்கஞ்சி.
எங்கே போவோம் எனத்தெரியா(து)
இருள்வழி யூடே விரைந்தனனே.

மேகம் செறிந்த வானத்தில்
மின்னிய மின்னல் ஒளியாலே
போகும் வழியில் ஒருசிறிது
புலப்படக் கண்டான், இடை
[யிடையே. 8

மேடும் பள்ளமும் முள்ளுமிக
மிகவே நிறைந்த கல்வழியில்
நாடும் துணையொன் றில்லாமல்
நடுங்கிச் சென்றான் அச்சிறுவன். 9

'கடவுள் காப்பார் நமை' என்று,
கையை நீட்டிக் காரிருளில்,
தடவித் தடவிக் குருடன்போல்
தயங்கித் தயங்கி நடந்தனனே. 10

அரளும் மனத்தால் அவன்முன்னே
அஞ்சிய வெல்லாம் தோன்றியவே.
புரளும் இலையில் பாம்புகளும்
புவியில் நெளியக் கண்டனனே. 11

அசையும் புதரில் ஓநாயும்,
ஆடும் செடியில் கொடுவிலங்கும்,
திசையும் தெரியா இரவினிலே
தெரிந்தன கண்ணில் தெளிவாக.

பாட்டி சொல்லிய கதைகளெலாம்
பதறப் பதற நினைவிலெழக்
காட்டில் திரியும் விலங்குகளைக்
கண்டான். கண்டான் பேய்களையும்.

வெளுரும் மான்போல் நாற்புறமும்
வெறித்துப் பார்த்தே அச்சிறுவன்
இருளின் ஊடே செல்கையிலே,
எதிரே ஒன்றைக் கண்டானே. 14

இரண்டாள் உயரம் இருக்கிறதே !
இராக்கதன் போல நிற்கிறதே !
இரண்டு கையும் நீட்டிஅது
எதிரே வழியை மறிக்கிறதே ! 15

'ஐயோ, இதற்கா வந்தேன்நான் ?
அநியா யமாய் மாள்வேனே !
பையன் வருவான் எனவீட்டில்
பாட்டியும் பிறரும் இருப்பாரே. 16

'என்பு போல வெண்ணிறமாய்,
ஏதும் உடையே இல்லாமல்
என்பு தோன்றும் கைஓங்கி,
எழுந்து சீறி வருகிறதே ! 17

'' 'பையன் வருவான் இரவினிலே ;
பற்றித் தின்போம் நாம்'' என்று,
ஐயோ, காத்து நிற்கிறதே !
அப்பா !' என்றே அலறினனே.

ஆயினும், அந்தச் சிறுகுரலை
அங்கே கேட்பார் யாருமிலை.
பேயினும் கொடிய அவ்வுருவம்
பேச்சே யின்றி நின்றதுவே. 19

சிறுவன் மனமும் மேன்மேலும்
திகிலால் நிறைந்து வருந்திடவும்,
உருவம் இன்னும் மூன்றுமடங்
கோங்கி உயர்ந்து தோன்றியதே.

'யாரும் இல்லை, இங்குதுணை
ஈசன் காப்பான்' எனநம்பித்
தீர மாக எதிர்த்திட்டால்,
செய்வ தென்ன பார்த்திடுவோம்'

என்றே அவனும் துணிவாக,
எடுத்து வைத்தான் ஓர்அடியை.
'நன்று, தீதா, இது?' என்றே
நடுங்கி நின்றான் மீண்டும்அவன்.

ஆயினும், அந்தப் பேருருவம்
அவனை அணுகி வரவில்லை.
வாயினைத் திறவா தங்கேயே
மரத்தைப் போல நின்றதுவே. 23

அதனைக் கண்டு சிறியவனும்
அஞ்சும் மனத்தைத் தான்தேற்றி,
'இதனைக் கண்டு நான்அஞ்சேன்'
என்றே நடுங்கிச் சென்றனனே. 24

இருளின் ஊடே கண்ணைமிக
இடுக்கிக் கூர்ந்து பார்த்தனனே.
மருளும் மனத்தை மாற்றியவன்
வலிமை மனத்தில் கொண்டானே.

நெருங்கி அவனும் உருவத்தை
நேராய்க் கண்ணால் பார்த்தவுடன்,
குலுங்கச் சிரித்தான் கலகலெனக்
கும்மா ளங்கள் போட்டானே. 26

'இதையா பேயென நினைத்தேன் [நான்?
இதுவா என்னை உணும்அரக்கன்?
இதையா கண்டு பதைபதைத்தேன்?
என்றே பன்முறை சிரித்தானே. 27

'மரம்போல் நிற்கும் இவ்வுருவம்
மரம்தான்; ஐயம் ஏதும்இலை.
கரங்கள் நீட்டி வழிகாட்டும்
கைகாட்டியே இதுஅன்றோ? 28

'வழியா தென்று தெரியாமல்
மக்கள் வருந்தும் போதினிலே
வழியைக் காட்டிக் காத்துவரும்
மரத்தைக் கண்டா பயப்பட்டேன்?

'இனிமேல் அஞ்சேன் இரவினிலே
எதையும் கண்டே! சூரியன்முன்
பனிபோல் மறையும் பயம்எல்லாம்
பதறு நெஞ்சால்' என்றானே.






# பால் அபிவிருத்தி

எஸ். இராமஸ்வாமி
(ரிடையர்ட் டிஸ்டிரிகட் வெட்டிர்னரி ஆபீசர்)

பால் அபிவிருத்திக்குப் பால் இனத்துப் பசுக்கள் அடிப்படையான ஆதாரம். பசுக்களின் அபிவிருத்திக்கு அவைகளின் போஷாக்கும் பராமரிப்பும் முக்கியம். பால் பசுக்களின் இன விருத்திக்கும், அவைகளின் பராமரிப்புக்கும், பால் உற்பத்திக்கும் பால் பண்ணைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். ஆகவே 1. இன விருத்தி. 2. பசுக்களின் பராமரிப்பு. 3. பால் பண்ணை நிர்வாகம். இம்மூன்று காரியங்களும் பால் அபிவிருத்திக்கு இன்றியமையாத சாதனங்களாகும். இம்மூன்றும் சரியான வழியில் அனுஷ்டிக்க வேண்டிய முறையை நன்கு தெரிந்து கொண்டு ஊக்கத்தோடும், சிரத்தையோடும் செய்து வந்தால் பால் அபிவிருத்தி சீக்கிரத்தில் கைகூடுவதில் சந்தேகமில்லை.

அன்னிய ஆதிக்கத்தின்கீழ் நமது நாடு அடிமைப்பட்டிருந்த காலத்தில், பிற நாடுகளின் பதவி மோகத்தால் விளைந்த மகா யுத்தத்தில் நாம் ஈடுபட வேண்டி வந்து ஏராளமான பொருளையும், தேச மக்களையும் பறிகொடுக்க வேண்டி வந்தது. இந்த இரண்டாவது மஹா யுத்தத்தால் நமக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்ட, நிஷ்டூரங்களில் நமது தேசத்துப் பசுக்களை லக்ஷக் கணக்கில் நாம் இழக்க நேர்ந்தது ஓர் துக்ககரமான விஷயம். இப்பெரு நஷ்டத்தின் உடன் விளைவு நாட்டில் பஞ்சம்—சோத்துப் பஞ்சம், துணிப்பஞ்சம் வெளிப்படை—பால் பஞ்சம் தெரியவில்லை வெளிப்படையாய்—காரணம் உண்ண உணவும், கட்டத் துணியுமில்லாமலிருப்பவர்களுக்கு பாலைப்பற்றின நினைவே ஏற்படாது. மேலும் நமது ஆகாரப் பொருள்களில் பால் ஒன்றாய்க் கருதப்படவில்லை. போர் முனையில் நின்று சண்டையிட்ட லக்ஷக் கணக்கான சிப்பாய்களுக்கும், ராணுவ உத்தியோகஸ்தர்களுக்கும் உணவுப் பொருள்கள் சேகரித்து அனுப்பவேண்டி வந்தபொழுது நமது தேசத்துக் கால்நடை சுலபத்தில் கைவைக்கக்கூடியதாயிருந்தது. அடிமை நாட்டிலிருந்து, வேண்டியதை, கேட்காமல் எடுத்துப் போகலாமல்லவா? ஆரம்பத்தில் இன விருத்திக்குதவாத பசுக்களையும், வேலைக்குதவாத எருதுகளையும் மாத்திரமே ஊன் பெருத்தற்கு உபயோகிப்பதாகச் சொன்னவர்கள் நாளடைவில், மாமிசப் பொருளின் அளவும் அவசியமும் அதிகரித்தபொழுது, கன்றுகள், கிடாரிகள் ஈனக்கூடிய பசுக்கள், வேலைத்திறன் வாய்ந்த எருதுகள் உள்பட உணவுக்காக வெளிநாட்டுக்கனுப்பப்பட்டன. இப்படிக் காலி செய்யப்பட்ட தேசத்தின் கதி நாளைக்கென்னவாகுமென்ற கவலை பிற நாட்டார்களுக்கு ஏற்படக் காரணமில்லை தான். ஆனால் நமக்கோ, இன்று தேசத்தில் பசுக்களும் எருதுகளும் குறையவே, பஞ்சம், எலும்பும் தோலுமாயும், நிர்வாணமாயும் உலவுகிறது. பால் பஞ்சம், குழந்தைகள் கர்ப்பிணிகளின் ஆகாரத்தையும் போஷாக்கையும் குறைத்து சுகாதார நிலைமையை ஒழித்து விபாதி வெக்கைகளைக் கிளறிவிட்டு வருகிறது. ஆகையால் இன்று சுதந்திரமடைந்த நம் நாடு உடன் கவனிக்கவேண்டிய விஷயங்களில் நமது நாட்டுப் பசுக்களைக் காப்பாற்றிப் பராமரித்துப் பால் அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டு மக்களின் ஆரோக்ய திடகாத்திர வாழ்க்கையை நிலைநாட்டுவது முதன்மையான காரியமாகும்.

யுத்தத்திற்குமுன் உலகத்திலேயே மாட்டு சங்கியையில் முதல் ஸ்தானம்

பெற்றது நமதுநாடு. இவ்வளவு கால்நடை நெருக்கமுள்ள நம் நாட்டில் பால் நெருக்கடி ஏற்பட்டிருப்பது ஆச்சர்ய மல்லவா? இல்லை. ஏனென்றால்—மாடு களின் பராமரிப்பு, சாஸ்திர ரீதியாக அவைகளை வளர்த்தல், நமது தேசத்தில் செய்யப்படவில்லை. மாட்டுக் கூட்டம் மிகுந்ததே ஒழிய இன விருத்தி எந்த பாகத்திலும் ஆராய்ச்சி செய்யப்பட வில்லை. தெரிந்தவரையில் நடத்தப்படவு மில்லை. ஆகையால் மாடுகளின் வளர்ச்சி யும், பால் கொடுக்கும் திறனும் நாளடைவில் கிரமமாய்க் குறைந்து மாடுகளின் எண்ணிக்கைக்குத்தக்க பால் கறவை இல்லாமல் போய்விட்டது. ஒரு சிறு குடும்பத்திற்கு வேண்டிய பால் கிடைக்க இரண்டு பசுக்களாவது வேண் டும். மாட்டின் கறவை கால்படிகூட சராசரிக்கு எட்டாது. குழந்தைகளுக் கும், கர்ப்பிணிகளுக்கும், வியாதியஸ்தர் களுக்கும்கூட பால் மருந்தாகவல்லவா இருக்கிறது! அமெரிக்கா, இங்கிலாந்து முதலான மேல்நாடுகளில் தினசரி தலைக் குக் கிடைக்கும் பால் விகிதாசாரம் 12 அவுன்ஸுக்கு மேல் ஒரு ராத்தல்வரை இருப்பதாகத் தெரிகிறது. நமது நாட் டில் 3 அவுன்ஸ் கிடைப்பதாகக் கணக் காளிகள் சொல்லக் கேட்கிறோம். ஆனால் பால் குடிக்கும் வழக்கமுள்ளவர்களே நமது நாட்டில் 100-க்கு 25 பேர்தான். மிகுந்த 75 பேரையும் சேர்த்துக் கணக் கிட்ட விகிதாசாரமாகும் இந்த மூன்று அவுன்ஸ். நமது மகாணத்தில் ஒரு பசு வின் ஒரு ஈத்துக் கறவை 600 ராத்தலே. இப்பொழுது கால்நடையின் சங்கியை கூடக் குறைந்துவருகிறது. ஆகவே பால் அபிவிருத்திக்காகச் செய்யும் பிரயத் தினங்களில் கால்நடை இன விருத்தி முதன்மையானதாகும். பசுக்களின் உயர் தரப் பராமரிப்புடன் ஆங்காங்கு பால் பண்ணைகள் நடத்த ஏற்பாடு செய்து பசுக்களின் கறவையை அதிகரிக்கச் செய்துகொள்ள வேண்டும். பால் இனத் துப் பசுக்கள் தினசரி சுமார் 20, 25 ராத்தல் பால் கொடுக்கக் கூடியவை. நமது தேசத்தின் வடபாகத்தில், பஞ் சாப், டெல்ஹி முதலான இடங்களில் பசுக்கள் இனவிருத்தி முறையில் வளர்க் கப்பட்டு, பால் பண்ணைகளில் பராமரிக் கப்பட்டு ஒரு ஈத்தில் 6000, 7000 ராத் தல் பால் தருகின்றன. சமீபத்தில் ஹோஸுர் பண்ணையில் (ஸர்க்கார் ஸ்தாபனம்) ஒரு ஈத்தில் ஒரு பசு 11,5000 ராத்தல் பால் கொடுத்ததாகத் தெரிகிறது. சீமையில் ஈத்துக்கு, அநா வது 300 கறவை நாள் கொண்ட காலத் தில் 10,000 ராத்தலுக்கு மேல்பட்டுக் கொடுக்கின்றது. நமது நாட்டுப் பசுக் கள் இந்த நிலைமைக்குக் கொண்டு வரப் படவேண்டும்.

## இனவிருத்தி :

இனம் என்பது தனிப்பட்ட யோக்ய தாம்சங்களையும் குணவிசேஷங்களையும் தனிப்பட்ட வம்சாவளியில் பெற்ற ஒரு வகுப்பைக் குறிக்கும் பசுக்களில் இவ்வித இரண்டு இனங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக் கின்றன. இவை: பால் இனம்—வேலை இனம் என்பன. உயர்ந்தபால் கறவையை முக்ய யோக்யதாம்சமாகக் கொண்ட இனத்தை 'பால் இன'மென்றும் வேலைத் திறனுக்கேற்ற சரீர புஷ்டியுள்ள இனத் தை 'வேலை இனம்' என்றும் சொல்கி றார்கள். உதாரணமாகக் கோயமுத்தூர் ஜில்லாவில் பழைய கோட்டையில் உற் பத்திபண்ணப்படும் 'காங்கயம் இனம்' வேலை இனத்ததாகும். வடக்கே சிந்து வில் உற்பத்தியாகும் 'சிந்தி இனம்' பால் இனத்ததாகும். இவ்வினத்தை விருத்தி செய்வதில் இரண்டு முறைகள் கையாளப் படுகின்றன. 1. தனிப்பட்ட இனத்துக் காளையையும், பசுவையும் இணைத்து இனத்தைப் பெருக்குவது (Selective Breeding) 2. இனத்துக் காளையை வைத்துக்கொண்டு, வம்சாவளி இல்லாத பலபட்டறையான (Non descript) பசுக்களோடு இணைத்து நாளடைவில் தகப்பன் இனத்துப்பசுக்களைப் பெறுவது (Grading). முதலில் சொன்ன தனிப் பட்ட இனவிருத்தி முறை அனுஷ்டிப் பது கஷ்டசாத்யமானது. சிக்கன முறை யும் ஆகாது. ஏனென்றால் நமது மாகா ணத்தில் பால் இனத்துப் பசுக்கூட்டமே

கிடையாது. ஓங்கோல் அல்லது நெல்லூர் இனம் பால் இனத்ததே. ஆனாலும் அவ்வளவு சிரேஷ்டமானதும் அல்ல, சென்னைக்கு வடக்கே ஒன்றிரண்டு ஜில்லாக்களில்தான் இருக்கின்றன. வட இந்தியாவிலிருந்தோ வெளிநாட்டிலிருந்தோ இவை தருவிக்கப்பட வேண்டும். எவ்வளவென்று தருவிக்க முடியும்? நமது மாகாணத்திலுள்ள பசுக்களின் கதி என்ன ஆவது? ஏற்கெனவே பராமரிப்பும் போஷாக்குமின்றி பலஹீனம் அடைந்திருக்கும் நமது நாட்டு மாடுகள் இன்னும் க்ஷீணதசையை அடைந்து நசித்துப் போகுமல்லவா? ஆகையால் இந்த முறை நாட்டில் பெரு முயற்சியாய் ஆரம்பிப்பதற்குத் தகுந்ததல்ல. சிற்சில முதலாளிகளும், பால் பண்ணைகளும் தனிப்பட்ட சொந்த வகையில் கையாளலாம் இந்த முறையை. மற்றொருவித இனவிருத்திமுறை காலதாமதமானாலும் நாளடைவில் கிரமமாய் பால் கறவை மேன்பட்டு பால் இனம் பெருகிப் பலனளிக்கும். இந்த இன அபிவிருத்தி (Grading) பின்வருமாறு: தனிப்பட்ட பால் இனத்துக் காளை ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டும். பலபட்டறையாய் வம்சாவளி சுத்தமில்லாததாயிருந்தாலும் கூடியவரையில் கறவை மிகுதியாகவிருக்கும் ஒரு கிடாரியைத் தேர்ந்தெடுத்து இவை இரண்டையும் இணைத்துக் கிடாரியைப் பலனுக்குக் கொண்டு வரவேண்டும். இதன் கன்று தகப்பன் இனத்தின் பாதி யோக்யதாம்சமுள்ளதாகும். அதாவது பாதி பால் இனத்ததாகும். இந்தக் கன்று கிடாரியாயிருக்க இதை இனத்துக் காளையோடு சேர்க்க வேண்டும். இதன் கன்று முக்கால் பாகம் பால் இனத்ததாகும். இப்படியே மேலும் செய்ய ஆறுவது தலைமுறையில் தகப்பன் இனமான அசல் பால் இனத்துக் கன்று எல்லா அம்சங்களோடும் குண விசேஷங்களோடும் கிடைக்கப் பெறுவோம். இந்த முறையில் இரண்டு விஷயங்கள் நமக்குத் தெரிகின்றன. 1. பிறக்கும் கன்று கிடாரிகளாயிருக்க வேண்டும்.—2. இனத்தின் குண விசேஷங்களை சந்ததிக்களிப்பது காளைதான்.

கிடாரிக் கன்றுகளாகவே பெறுவதற்கும், "பிரஜோத்பத்தி நிர்ணயம்" (Sex Detremination) என்ற சாஸ்திர விதிப்படி, சாத்தியமாகும். தாயினிடத்திலிருந்து, தேகவாகு, நடை, பாவனையாகிய சாதாரண பாவங்களை சந்ததி அடைகிறது. மேல் கூறியபடி இன விருத்தி செய்வதில் காளை சுத்தமான பால் இனத்ததாக மாத்திரம் இருந்தால் போதாது. வியாதி வெக்கை இல்லாததாய், அங்கஹீனம் ஏதும் இல்லாததாய், ரோஷமும் சுறுசுறுப்பும் உள்ளதாயும் ஆரோக்ய திடகாத்திரமுள்ளதாயும் தெரிந்த வம்சாவளி யுள்ளதாயுமிருத்தல் அத்யாவசியமானது—பொலிவுக்குகந்த வயது வந்ததாயுமிருக்க வேண்டும்.

இணைக்கப்படும் கிடாரியும் நல்ல லக்ஷணங்களும் தேக அமைப்பும் பெற்றதாயிருக்கவேண்டும். பின் முதுகுமேல் கீழ் வளைவில்லாது நேராக இருக்கவேண்டும். (Straight back) இடை விசாலமுள்ளதாக இருக்கவேண்டும். இந்த அமைப்பு கர்ப்பகோசத்தை உள்ள "பெல்விஸ்" என்னும் எலும்புக்கு இடவசதி அளித்து அதன் கீழ் அமைந்திருக்கும் பால் யந்திரம் - மடி - (Udder) வளர்ந்து பெருகுவதற்கு ஏற்றதாகும். சுகப்பிரசவத்திற்கும், பால் கிரந்தி (Gland) களின் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும் இவ்வமைப்பு. கிடாரியோ, பசுவோ இணைப்புக்குகந்த சந்தர்ப்பத்தில் இருக்க வேண்டும். அதாவது "காளை நோக்க" மாயிருக்க வேண்டும். பசுக்களிடையே இந்தக் காளைநோக்கமாயிருக்கும் நிலைமை இயற்கைக்குணமாகும். கிடாரிக்கு 2, 2½ வயதில் இது தோன்றுகிறது. தோன்றின 72 மணி நேரத்தில் அதாவது மூன்று நாட்களுக்கு இருந்து இந்நிலை நிவர்த்தியாகிறது. ஆரம்பித்தபின் கிரமமாக மூன்று வாரத்திற் கொருமுறை ஏற்பட்டு மூன்று நாட்களுக்கு இருந்து நிவர்த்தியாகும். இதை "காளை நோக்கு" காலம் அல்லது "பருவ" காலம் என்று

சொல்லலாம். இந்தக் காலமே காளை யோடு சேர்க்க வேண்டிய சந்தர்ப்பம்—காளை சேர்ந்தபின் இந்த அவஸ்தை நின்றுவிடுகிறது. பிறகு ஈன்று, கன்றும் தாயுமான இரண்டு மூன்று மாதங்களில் இப்பருவகாலம் தோன்றும் - தோன்றின மூன்று நாட்களிருந்து மறைந்து மறுபடி காளை சேர்க்கும்வரை கிரமமாய் மூன்று வாரத்திற்கொருமாறுதல் ஏற்படும். இந்த மூன்று நாட்கள் கொண்ட பருவகாலத்தில் காளையோடு இணைத்தால்தான் பசு பலனுக்குவரும். இந்தக் காலத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இந்த நிலைமையிலிருக்கும் பசு, காளை சேரும் உணர்ச்சியால் ஒரு விதமான குதூகல ஸ்திதியில் இருக்கும். வாலைத் தூக்கிக்கொண்டு ஓடும்—மற்ற மாடுகளின் முதுகின்மேல் ஏறும். அடிக்கடிக் கத்தும்—பசு, காளைக்குக் கத்துகிறதென்பார்கள். அரையிலிருந்து ஒருவகைக் கழிவு நீர் [discharge] பிரியும். இந்தச் சின்னங்களைக் கொண்டு பசு, காளை சேர்க்க வேண்டிய காலத்தில் இருப்பதாகத் தெரிந்துக் கொள்ளலாம். மேல்கூறிய சின்னங்கள் எல்லாவற்றையும் ஒவ்வொரு பசுவும் காண்பிக்காமலிருக்கலாம். சில பசுக்கள் கத்தாது. சில பிற மாட்டின் பேரில் ஏறாமலிருக்கலாம். கழிவு நீர் பிரிவதும், ஒருவித குதூகல உணர்ச்சி வேகத்துடனிருப்பதும், தீனி சரியாகத் தின்னாமலிருப்பதும் எப்பொழுதும், எப்பசுவிலும் மாறாத சின்னங்களாகும். பசுக்களின் சுபாவங்களையும், பழக்க வழக்கங்களையும், பாவனைகளையும் நன்றாகக் கவனித்துத் தெரிந்து கொள்ள வேண்டியது நமது முக்கிய கடமை.

இந்தச் சின்னங்கள் மூன்று நாட்களுக்குத்தான் தோன்றும் இந்த மூன்று நாட்களில் எப்பொழுது காளைக்குச் சேர்க்க வேண்டுமென்பது ரயத்துக்களுக்குக் கவலை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறது. தெரிந்த சிலர் “பருவ காலம்” தோன்றிய உடனேயே இணைத்துவிட வேண்டுமென்பர். சிலர் பருவகால சின்னங்கள் கண்ட 24 மணி நேரத்திற்குள் சேர்ப்பதில் பலனில்லை என்று கருதுவர். மற்றும் நிறைந்த அனுபவமுள்ள சிலர் இந்த மூன்று நாளில் எப்பொழுது சேர்த்தாலும் பலன்படும் என்று சொல்கிறார்கள். நான் பார்த்த வரை கடைசியாகச் சொன்ன விதம் சேர்ப்பதில் பலனளிப்பதாகவே கருதுகிறேன். முக்கியமாகக் கவனிக்க வேண்டியது பசு, காளை நோக்கமாயிருக்கிறதா, காளை வேறு பசுவைப் பொலிந்து களைத்துப் போகாமலிருக்கிறதா என்று தெரிந்துகொண்டு சேர்த்தால் பலனாவதில் சந்தேகம் ஏற்படக் காரணம் இல்லை.

பருவகாலமும் க்லுப்தமாய் மூன்று வாரத்திற்கொருமுறை ஏற்படாமலுமிருக்கலாம். மூன்று நாளைக்குக் குறைந்த காலத்தில் நிவர்த்தியாயும் விடலாம். பருவகாலம் தோன்றி மறைவது இயற்கைவாகானதால் சரீர ஸ்திதிக்குத் தக்கபடி காலக்கிரமத்திற்குச் சில நாட்கள் முன்பின் ஏற்படுவது சகஜம். ஆகையால் காளை சேர்க்கும் விஷயத்தில் பசுவின் இயற்கைக் குண விசேஷத்தைத் தெரிந்துகொண்டு, தக்கபடி நடந்து கொள்வது உத்தமம். பசுவை, காளைக்குச் சேர்த்த பின்பு பலன் பட்டுவிட்டதா என்று அடுத்தபடி கவனிக்க வேண்டும். இந்த விஷயம் மாடுகள் வைத்துப் பராமரிப்பவர்களுக்கு அளவில்லாத கவலையையும், டாக்டர்களுக்கு நீங்காத தலைவலியையும் உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறது. இது மிகச் சிக்கலான விஷயம் தான். பசு பலனடைந்திருந்தால் பின்னால் பருவகால சின்னங்களைத் தோற்றுவித்தல்கூடாது. இயற்கைக்கு விரோதமாகும். ஆனால் அபூர்வமாகச் சில பசுக்கள், பலன்பட்டிருந்தும், முதல் இரண்டு மூன்று பருவகால சமயங்களில் சின்னங்களை லேசாகக் காண்பிக்கின்றன. இதே விதமாய் சில காளைக்குப் போடப்பட்ட பின் சின்னங்கள் நின்றுவிட்டபோதிலும் பலன் படாமலிருந்து விடுகின்றன. இவ்வியற்கை விரோத விஷயங்களை அபூர்வ சந்தர்ப்பங்களாக உணர்ந்து பொறுமையோடிருக்க வேண்டும். காளை சேர்க்கப்

பட்ட பசு பின் மூன்று வாரத்தில் காளை நோக்காக இருப்பதாகத் தோன்றினல் சற்று நிதானிக்க வேண்டும். அவசரப் பட்டு மறுமுறை காளைக்குச் சேர்ப்பது சரியில்லை. அபாயகரமாயும் முடியலாம். காளைக்குச் சேர்த்துவிட்டோம், இனி கன்று போடுவதுதான் பாக்கி என்று நிச்சிந்தைபாய், கவனிப்புக்கிடமில்லாமல் பசுவை கிராமத்திற்கோ மேச்சல் ஸ்தலத்திற்கோ ஓட்டிவிடுவதும் தவறே. நிதானத்துடனும், பொறுமையுடனும் இரண்டு மூன்று மாதங்கள் காத்திருந்து பசுவைக் கண் பார்வையில் வைத்திருந்து சந்தேகம் நிவர்த்தியாகாவிட்டால் டாக்டரிடம் காண்பித்து, பரீக்ஷித்து நிச்சயம் செய்துகொள்வது நல்லது.

பால் இனத்துக் காளையைத் தேர்ந்தெடுத்தல் முக்யமான விஷயம். காளை உயர்தரப் பால் இனத்ததாயிருத்தல் அவசியம். தெரிந்த வம்சாவளியுடையதாயிருக்கவேண்டும். தேக அமைப்பும், சரீரவாகும் கட்டுமஸ்தும் லாகவமும் பொருந்தியதாயிருக்க வேண்டும். கொழுப்பேறி, ஊழல் சதைவைத்து, குட்டைக் கால்கள், பருத்த சரீரம் இவைகள் கொண்டு யானைபோல் அசைந்து நடக்கும் காளைகள் விலக்கப் படவேண்டும். இந்த விதத்தில் நாம் தேர்ந்தெடுக்கக்கூடியவை, சிமை, சிந்தி, ஒங்கோல், மைசூர் இனங்களே. ஒங்கோல் மைசூர் காளைகளில் சில ரகங்கள் பால் இனங்களாகக் கருதப்பட்டபோதிலும் பாலின் அபிவிருத்திக்குகந்ததில்லை. தென் இந்தியாவில் பால் இனம் இல்லை என்றே சொல்லலாம். ஒங்கோல் தினசரிக் கறவை ஜாஸ்தியானல் 15 ராத்தல் தான். மைசூர் ஹல்லிக்கார் இனம் இந்த அளவுகூட தாக்கூடியதோ என்னவோ? ஆகவே நமது தேர்ச்சிக்குள் காண்பது வடதேசத்து சிந்தியும், வெளி தேசத்ததாகிய சிமைக் காளைகளுமே. சிமைக் காளைகள் மிகுந்த பால் கறவை உள்ளவைகளே. ஆனல் அதிகக்குளிர்ச்சி தேசத்து இனமானதால் நமது உஷ்ணப் பிரதேசத்தில் விருத்திக்கு வருவது கடினம். வைத்துப் பராமரிப்பதும் சிக்கனமாக முடியாது. நமது பூமியில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்கள் இவைகளுக்கு அவ்வளவாகச் சேருவதில்லை. இவ்வளவோடு உயர்தர இனத்துப் பசுக்கள், காளைகள் இவ்வினத்தவை சுத்தமானவை நமது தேசத்தில் இப்பொழுது கிடைக்கின்றனவா என்பதும் ஒரு கேள்விதான். நமது தேர்ச்சியில் எல்லாவிதத்திலும் முன் நிற்பது சிந்தியே. தென்னிந்தியாவில் கால்நடை இலாகாவின் பிரயத்தனங்களாலும், பால் அபிவிருத்தியில் ஈடுபட்ட சில தனவந்தர்களின் முயற்சியாலும் சிந்திக் காளைகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. இப் பசுக்களின் ஜனன பூமி பாகிஸ்தானத்தில் இருக்கிறபடியால் இவைகளை நமது நாட்டிற்குக் கொண்டு வருவது சற்றுக் கடினமாயிருக்கலாம். இந்திய சர்க்கார் இது விஷயமாய், சிந்தி சர்க்காரோடு ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த இனத்துக் காளையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு முன்சொன்ன வகையில் கிடாரியோடு சேர்த்து இனவிருத்தி செய்யப்படவேண்டும்.

நாளடைவில் சுத்தப்பால் இன அபிவிருத்தி முறையைக் கையாளுவதே [Grading] சிலாக்கியமானபடியால் இந்த முறையையே அனுசரிக்கவேண்டும். சுமார் 15 வருஷ காலத்தில் அதாவது இன அபிவிருத்தி துவக்கத்திலிருந்து 6-வது தலைமுறையில் நமது பசுக்களெல்லாம் பால் இனத்தாகிவிடும். ஒரு பொலி காளை ஒரு வருஷத்தில் சுமார் 90 பசுக்களை பலப்படுத்தும். இப்படி உயர்தரப் படுத்தப்பட்ட இனத்தைத் தனிப்பட்ட முறையில் அபிவிருத்தி செய்து [Selective freeding] நாடெங்கும் பக்காப் படி 3-க்கு மேல்பட்ட கறவையுள்ள மாடுகள் வீட்டுக்கு வீடு அமைந்தால் பால் மிகுதிபால் தாகத்திற்குக்கூட பால் பருக முடியும். இத்துடன் இன அபிவிருத்தி செய்யும் முறை கூடியவரை விபரமாய் சொல்லப்பட்டு முடிவு பெற்றது. அடுத்த இதழில் பசுக்களின் போஷாக்கும் பராமரிப்பும் பற்றிக் கவனிக்கப்படும். [தொடரும்]

வலைவீச்சு

# இளநாக்கும் இளஹ்ருதயமும்

காமம் உள்ளே பிரவேசிக்குமுன் காயத்ரீ மாதா முந்திக் கொண்டு விட வேண்டும். 17-வயதிலும், 20-வயதிலும், கல்யாணத்திற்கு ஏற்பட்ட சாரதா சட்ட வயதை யெல்லாம் தாண்டி உபநயனம் செய்தால், ப்ராஹ்மண்யம் ஏற்படுமா? ப்ரும்மவர்ச்சஸ் ஏற்படுமா? காமவெறியினால் முகத்தில் பருவும் அல்லது ஹ்ருதயத்தில் கண்ட ஸ்திரீகளின் உருவங்களின் நினைவும் ஏற்படுமா? சித்தத்தில் காமம் என்னும் அசுத்தி முளைப்பதற்கு முன்னமேயே ஜகன் மாதாவினுடைய காயத்ரீ பக்தி பூர்வமாய் ஹ்ருதயத்தில் நிறுவப்படவேண்டும். 16-வயதாகி விட்டால் புத்திரனை மித்திரனாக நினைக்க வேண்டும் என்கிறது ஸ்ம்ருதி. மித்திரனான பிறகு அவனுக்கு உபநயனம் செய்தால் அது நாம் புத்திரனுக்குச் செய்ய வேண்டிய கடமையில் தவறி விட்டதாகவே யாகும். 16-வயதுக்கு மேல் நாவில் ஸம்ஸ்க்ருத எழுத்தை நுழைத்தால் அது எவ்வளவு அழகாகக் கொஞ்சுகிற தென்பதை அனுபவிகளே அறிய வேண்டும். 8-வயதுக்குள் காயத்ரீ மந்த்ரத்தை க்ரஹிக்காதவனுக்கு எந்த மந்த்ர ஸித்தியும் உண்டாகாது. பிரும்மவர்ச்சஸூம் உண்டாகாது. 8-வயதுக்குள் ஸம்ஸ்க்ருத எழுத்துக் கற்றுக் கொள்ளாதவனுக்கு அக்ஷர உச்சாரணம் அம்பலந்தான். நம் ஸந்ததிகளில் எல்லோருக்கும் ப்ரும்மவர்ச்சஸூம், மந்த்ரஸித்தியும் இருக்கவேண்டு மென்ற திடஸங்கல்பத்துடன் தை பிறந்தவுடனேயே 8-வயதுக்கு மேல்பட்ட எல்லா ஆண்குழந்தைகளுக்கும் பாக்கியில்லாமல் உபநயனம் செய்விக்க சிறியோர், பெரியோர், ஏழை, தனவந்தர் என்ற வித்தியாஸமில்லாமல் ஆங்காங்கு எல்லோரும் பிரயத்தனப்பட வேண்டும்.

ஆதலால் ஆசாரமும், மந்த்ரசக்தியும், தத்துவ ஞானமும், அழியாது வளர்ந்து வரவேண்டி அதை ரக்ஷிக்க கடமைப்பட்டுள்ள அந்தணர்கள் தம் குழந்தைகளை காமம் புகாத 8-வயதுக்குள் உபநயனம் செய்வித்து, கொஞ்ச காலமாவது குருகுலவாசத்தில் காயத்ரீ அம்பிகையின் த்யானசக்தியையும், மந்த்ரஸித்தியையும் ஆரம்பித்துக்கொண்டு, பின்னர் கூடிய வரை அதிக தோஷங்களுக்கு இடமில்லாது உலக நடவடிக்கைக்கு வேண்டிய முறையில் வித்தையையும், ஜீவனத்தையும் சீர்படுத்திக்கொண்டு, அந்தணரில் சிலராவது பூர்த்தியாக வேதசாஸ்த்ரானுஷ்டானங்களைப் பயிலும்படி ஆதரவளித்துக்கொண்டு, நமது வேத தர்மத்திற்கு ரக்ஷைபுரியவேண்டும். ஒவ்வொரு உபநயனத்திற்கு முன்பும், முன் இரண்டு நாட்களில், வேத தர்மங்களின் அர்த்தம் தெரிந்த பெரியோர்களை வரவழைத்து, உபநயன ப்ரயோகத்தில் ஆதிமுதல் அந்தம்வரையில் வரும் மந்த்ரங்களின் அர்த்தங்களையும் கிரியைகளின் தாத்பர்யங்களையும் உபநயனம் செய்து வைக்கும் பிதாவும், உபநயனம் செய்துகொள்ளும் குழந்தையும் பொறுமையாகக் கேட்கும்படி ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். இப்போதும் ஆங்காங்கு அரிதாக மந்த்ரார்த்தம் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். ஸங்கீதம், நர்த்தனம் முதலிய கலைகளை ஆதரிப்பதைவிட உபநயனத்தில் குழந்தைகளுக்கு மந்த்ரார்த்தம் பதியும்படிச் செய்வது ஆழ்ந்த பயனைத்தருவது.

8 வது வயதுக்குள் உபநயனம். களங்கமற்ற அந்த வயதிலேயே காயத்ரீ தேவியின் மந்த்ரஸித்தி. இதுவே நம் மதத்திற்கு உண்மையான ரக்ஷை.

—வேத தர்மசாஸ்த்ர பரிபாலன ஸபை ப்ரசுரம்.




# வஞ்சம்

"கிரன்"

இரவு மணி பன்னிரண்டாகியும் தூங்காமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் பாலு. அவன் தூங்காததோடு பக்கத்தில் படுத்திருந்த அவனது தாத்தாவையும் தூங்கவிடாமல் உபத்திரவம் செய்து கொண்டிருந்தான். தினந்தோறும் அவனுக்கு இரவில் ஒரு கதை சொல்வது தாத்தாவுக்கு வழக்கம். அதைக்கேட்டு முடித்தால்தான் அவனுக்குத் தூக்கம் வரும். ஆனல் அன்று அவனுக்கு அவன் தாத்தா கதை சொல்லவில்லை.

தாத்தாவுக்கு பாலுவின்மேல் கோபம். தாத்தாவுக்கு மட்டும் என்ன ? வீட்டில் எல்லோருக்குமே அன்று பாலுவின்மேல் கோபந்தான். அதற்குக்காரணம் அவன் அன்று மாலை செய்த குற்றந்தான்.

பக்கத்துத் தெருவிலிருக்கும் பரமேசுவரனுக்கும் பாலுவுக்கும் விளையாடும் போது ஏதோ சண்டை வந்துவிட்டது. பாலுவைவிடப் பரமேசுவரன் வயதில் இரண்டு வருஷம் அதிகரித்தவன். பலத்திலும் பாலுவைவிட மேம்பட்டவன். அதனல் அவன் பாலுவை அடித்துவிட்டான். பாலுவுக்கு அவனை எதிர்க்கச் சக்தியில்லை.

மாலை நாலரை மணிக்கு பாலுவுக்கும் பரமேசுவரனுக்கும் சச்சரவு நடந்தது. அடி ஒன்றும் பிரமாதமில்லை. தப்பிதமும் பாலுவின்மேல்தான். இருந்தாலும் ரோசக்காரனகிய அவன், விளையாடுமிடத்திலிருந்து நண்பர்களைப் பிரிந்து சென்று ஊர்க்கோடியிலிருந்த பாழும் சாவடியில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தான். நேரம் செல்லச் செல்ல பரமேசுவரன் பேரில் தன் வஞ்சத்தை எப்படித் தீர்த்துக்கொள்வது என்கிற யோசனையில் பலமாக ஈடுபட்டான். முடிவில் ஒரு யோசனை தோன்றவும் சாவடியிலிருந்து புறப்பட்டு ஊருக்குள் வந்து பரமேசுவரன் வீட்டுத் தோட்டத்திற்குள் புகுந்தான். அப்போது இரவு மணி எட்டு. கொட்டகையில் மாடுகளும், கன்றுகளும் கட்டியிருந்தன. தென்னை மட்டைகளைத் துண்டு துண்டாக வெட்டி வெய்யிலில் காய்வதற்காக ஒருபுறத்தில் பரத்திப் போடப்பட்டிருந்தன. அதிலிருந்து இரண்டு முழ நீளத்தில் ஒரு தென்னை மட்டையைக் கையிலெடுத்த பாலு கொட்டகைக்குள் புகுந்தான். அங்கே ஒரு பசு, தன் கன்றின் உடம்பை நாக்கால் நக்கிவிடடுக் கொண்டிருந்தது. பாலு சிறிதும் யோசியாமல் அந்தக்கன்றுக் குட்டியின் முகத்தில் ஓங்கி அடித்துவிட்டான். அது துடி துடித்துப்போய்த் தள்ளி விழுந்தது. அதைக் கண்ட மாடு 'அம்மா!' என்று அலறிற்று. மாட்டுக்கொட்டிலில் ஏதோ சந்தடி என்பதை ஊகித்தறிந்த பரமேசுவரனின் தகப்பனர் உள்ளேயிருந்து தீபத்துடன் ஓடிவந்தார். அதைக்கண்டு ஓட்டம் பிடித்தான் பாலு. ஆனல் அவர் விடவில்லை. ஒரே தாவலில் அவனை எட்டிப் பிடித்து விஷயத்தை விசாரித்து

விளக்கையெடுத்துக் கன்றுக் குட்டியைப் பார்த்தபோது அதன் வலது கண்ணிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது தெரிந்தது.

மாலையிலிருந்து பாலுவைக் காணவில்லையே என்று வீடு வீடாகத் தேடிக் கொண்டுவந்த அவன் தாத்தா, பரமேசுவரன் வீட்டிலும் நுழைந்தபோது அவருக்கும் விஷயம் விளங்கவே பாலுவை நன்றாக உதைத்தார். பிறகு கன்றுக் குட்டிக்கு ஏதோ வைத்தியம் செய்து விட்டு பாலுவை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வீட்டில் எல்லோரும் பாலுவை வைதார்கள். திட்டினார்கள். அடித்தார்கள்.

இரவு வழக்கம்போல் தாத்தாவிடம் படுத்துக்கொண்டு கதை சொல்லும்படி உபத்திரவம் செய்த பாலுவிடம் தாத்தா பேசவேயில்லை. வீட்டில் மற்றவர்களும் பேசாதது அவன் மனதை வாட்டிற்று. ஆனால், 'பரமேசுவரன் தன்னையடித்ததற்குப் பதிலுக்குப் பதில், தான் செய்தது சரி' என்றே அவன் மனம் கூறிற்று. இரவு வெகு நேரம் வரையில் தாத்தாவிடம் கதையை எதிர்பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் கண்ணயர்ந்தான் பாலு.

விடியற்காலம் கனவுகண்டான். தாத்தாவின் கதைகளில் வரும் ராட்சதன் போல் ஒருவன் வந்து பாலுவின் எதிரில் நின்று, " சிறுவனே! விளையாடும் போது நீ தவறு செய்தாய். அதற்காகப் பரமேசுவரன் உன்னை அடித்தான். நீ குற்றமற்றவனாக இருந்தால் பதிலுக்கு அவனை அடித்திருக்கலாம். குற்றத்தையும் செய்துவிட்டு, பரமேசுவரனையும் விட்டு விட்டு ஒரு பாவமும் அறியாத அந்தக் கன்றுக்குட்டியை நீ அடித்தது நியாயமா?—" என்று அதட்டினான். அதைக்கண்டு அலறியடித்துக் கொண்டு எழுந்த பாலு, " இல்லை; இல்லை; இனிமேல் இப்படிச் செய்யவில்லை. சாதுவான அந்தப் பசுங்கன்றை நானடித்தது தவறுதான். வஞ்சம் தீர்த்துக்கொள்வதாக நினைத்துப் பெரிய தப்புச் செய்துவிட்டேன். இனிமேல் இப்படியெல்லாம் செய்யமாட்டேன். என்னை மன்னிக்கவேண்டும்; மன்னிக்கவேண்டும்" என்று கூவினான். பக்கத்தில் படுத்திருந்த தாத்தா உள்பட வீட்டில் எல்லோரும் விழித்துக்கொண்டு பாலுவைச் சமாதானம் செய்தனர். மறுநாட்காலையில் மன்னிப்புக் கேட்கப் பரமேசுவரன் வீட்டிற்கு ஓடினான் பாலு. அங்கே கன்றுக் குட்டியின் கண் சொஸ்தமாகி யிருந்தது கண்டு களித்தான். அன்று முதல் பாலு பரம உத்தமனாக நடந்துகொண்டான். அதனால் அவன் தாத்தா தினசரி நல்ல கதைகளாக இரண்டு, மூன்று சொல்லி வந்தார். பாலு சந்தோஷமடைந்தான்.




—

# சாம்பான் குடும்பம்

எஸ். பத்மாஸினி

அன்று சாம்பானின் குடிசை மெழுகிக் கோலம் போட்டிருந்தது. அவனுடைய மருமகள் திம்மச்சி உள்ளே சமையல் செய்துகொண்டிருந்தாள். அவனுடைய மனைவி வாசல் திண்ணையில் உட்கார்ந்து, ஏதோ ஒரு கூடையை முடைந்துகொண்டிருந்தாள். அவனுடைய பேரன் பேத்திகள் தெருவில் விளையாடிக்கொண்டிருக்தார்கள்.

வெளியில் எங்கோ போயிருந்த சாம்பான் பத்து இளநீர்க்காய்களும், கத்தரிக்காய், கொஞ்சம் கீரை, இவைகளை ஒரு கூடையில் வைத்துத் தூக்கிக்கொண்டு வந்தான்.

“ அம்மாடி ” என்று தலையிலிருந்த கூடையைக் கிழவியின் பக்கத்தில் வைத்துத் தானும் உட்கார்ந்தான். கிழவி, “ எங்கேயிருந்து கொண்ணுந்தே? நல்ல பிஞ்சுக்கத்திரிக்காயாயிருக்கே !” என்றாள். “ எங்கேருந்துண்ணு ! பண்ணை ஐயா தோட்டத்திலிருந்துதான். இண்ணக்கி அவங்க தோட்டத்துக்கெல்லாம் தண்ணி பாச்சி, தென்னமரத்துலே ஏறித் தேங்காயெல்லாம் பறிச்சேன். கூலி கொஞ்சம் அதிகமாகவே கொடுத்தாரு. அவருக்கு சந்தோசம், கள்ளுக் குத்தகைக்கு விட்டிருந்தப்போ இருந்ததைப் பாக்க இப்போ நாலு பங்கு தேங்கா கடச்சிட்டு, அதனாலே இதெல்லாம் ஒம்புள்ளேங்களுக்குத் குடுன்னாரு, ” என்றான்.

“ மவராசன், புண்ணியாத்மா, அந்தய்யா நல்லாருக்கணும். நேரமாயிடுச்சே சாப்பிடுவே வா ” என்றாள்.

“ குப்பான் வரட்டும். சேந்தே சாப்பிடலாம் ” என்றான்.

“ குப்பான் டேஷனுக்குப் போயிருக்கான். காத்தானும் அவம் பொஞ்சாதியும் வரால்லே, நீ மொதல்லே சாப்பிடு, ஏன்னு நீ காத்தாலே கஞ்சிகூடக் குடிக்கல்லே, கையைக் காலைக் கழுவிக்கோ ” என்று சொல்லி ஒரு செம்பில் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தாள். சாம்பான் குடிசையைச் சுற்றிலும் ஒரு தடவை பார்த்தான். தன் பேரன், பேத்திகள் நல்ல துணி உடுத்திக்கொண்டிருப்பதும், குடிசையைச் சுற்றி அசுத்தம் என்பதில்லாமல், சுத்தமாயிருப்பதும், குடிசைமேல் பூஷனிக்கொடி படர்ந்திருப்பதும், அவனுக்கு சந்தோஷமாக இருந்தது.

அவனுடைய சிறிய மகன் காத்தானைப் பார்த்து பத்து வருஷம் ஆயிற்று. இன்றுதான் மறுபடியும் மகனைப் பார்க்கப் போகிறான். மகன் வரப்போகிறான் என்று கேட்டவுடன் பழைய சமாசாரமெல்லாம் அவனுடைய மனக்கண்முன் வந்தது.

பத்து வருஷத்திற்கு முன்னால், சாம்பான் மாதிரி குடிகாரர்களை, அந்த வட்டாரத்தில் கிடையாது. அவன் விதம் ஒருவராலும் குடிக்க முடியாது. யாருக்காவது அவனை வேலை வாங்கவேண்டுமென்றிருந்தால், நாலு அணாவுக்குக் கள்ளுத்தண்ணி கொடுத்தால் போதும். முன், பின் யோசியாமல் ஒப்புக்கொண்டு விடுவான். எவ்வளவு இழிவான வேலையாயிருந்தாலும் செய்துவிடுவான்.

சாம்பான் மனைவி மாரியாயி ரொம்ப நல்லவள். எத்தனை தரம் அடிபட்டிருக்கிறாள்! இன்னும் அவளுடைய உடம்பில் எத்தனையோ தழும்புகள் மறையாமல் இருக்கின்றன. பாவம் அவ்வளவையும் பொறுத்துக்கொண்டு, அவனிடம் குடித்தனம் செய்துகொண்டிருந்தாள். பத்துக் குழந்தையைப் பெற்றெடுத்தாள்,

இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் தான் மிஞ்சினார்கள்.

பத்து வருஷங்களுக்கு முன்னால், ஒருநாள் சாம்பான் எங்கோ நன்றாய் வேலை செய்தான். கூலி எட்டு அணுவுக்கு மேல் பார்த்திராத சாம்பானுக்கு, அன்று முழுசாக ஒரு ரூபாய் கிடைத்தது. அவனுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. நேரே ஒரு கள்ளுக்கடைக்குள் நுழைந்தான்.

தினம் இரண்டு, அல்லது மூன்று அணுவுக்குமேல் குடிக்கமாட்டான். இன்றுசந்தோஷத்தில் பன்னிரண்டு அணுவுக்குக் குடித்தான். அரை அணுவுக்கு இரண்டு வடைகளை வாங்கிக்கொண்டு வெளியே வருவதற்குள் போதை ஏறி விட்டது. தள்ளாடித் தள்ளாடிக் கொண்டே வீட்டிற்கு வந்தான்.

அவனுடைய சிறிய மகன் காத்தானுக்குப் பதினைந்து வயது. நன்றாய் உழைப்பான், காணமுள்ள பையன். அந்த ஊரில் ஒருவர் இராப்பள்ளிக்கூடம் வைத்துப் படிப்புச் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார். அவரிடம் போய் கொஞ்சநாள் படிப்புச் சொல்லிக்கொண்டதில் அவனுக்குத் தமிழ் நன்றாய் எழுதவும் வாசிக்கவும் வரும். குடியினால் வரும் தீமைகளைத் தினம் நேரில் பார்த்துப், புத்தகங்களில் வாசித்தும் அவன் நன்றாய் அறிந்திருந்தான். அவர்களுடைய சேரியில், சாயங்காலம் தினம் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்வதும், அசிங்கமான வார்த்தைகளை வாய்க்கு வந்தபடி உளறுவதும், பெண்களை மொத்துவதும், அவர்கள் ஐயோ, அம்மா, என்று கதறுவதும், தினசரி நடக்கும் காட்சிகள். அவனுக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய் இதிலேயே வளர்ந்தும் அவனுக்கு இவை அருவருப்பாய் இருக்கும். தினம் ஒருதரம் கருப்பண்ணசாமி கோயிலுக்குச் சென்று, "அப்பா, என்னைக் குடிப் பழக்கத்தில் மாத்திரம் இழுத்துவிட்டு விடாதே" என்று கையெடுத்துக் கும்பிடுவான். இவன் தன் தந்தையிடமும் மற்றவர்களிடமும் போய், "ஏன் குடிக்கிறீர்கள்?" என்று கேட்டு அவர்கள் குடித்து விட்டுக் கூத்தாடுவது போலும், தள்ளாடி நடந்துவருவது போலும் அழகு காட்டுவான்.

இந்தச் சின்னப் பையன் சொல்லும் போது, அவர்களுக்குக்கூட வெட்கமாகத்தான் இருக்கும். ஆனால் வேலை முடிந்து வீட்டிற்கு வரும் வழியில் பகாசுரன் மாதிரி (அவர்களுக்கு தெய்வம் போல்) இருக்கும் கடையில் நுழையாமல் எப்படி வருவார்கள்! சாமி, இதற்கு ஒரு விமோசனமில்லையா? என்று அவனுக்குத் தோன்றும். இன்றைக்குக் கூலிக்குப் போன இடத்தில், அதிகமாக ஒன்றும் கிடைக்கவில்லை. கிடைத்த நாலு அணுவைத் தன் தாயிடம் கொண்டு வந்து கொடுத்தான். அவளும் சந்தோஷத்துடன் கடைக்குப் போய், உப்பு, புளி வாங்கிவந்து சமையல் செய்து, மகனைச் சாப்பிட அழைத்தாள்.

"ஆயா! நாங்குளிச்சிட்டு வாரேன்" என்று சொல்லி பக்கத்திலிருந்த ஆற்றுக்குப் போய், நன்றாய்க் குளித்துவிட்டு தன் தங்கையையும் குளிப்பாட்டி கையில் பிடித்துக்கொண்டு, வந்துகொண்டிருந்தான். தூரத்தில் தன் தகப்பன் தள்ளாடித் தள்ளாடி வருவது தெரிந்தது. "சரி இன்று அமர்க்களம்தான்" என்று சொல்லிக்கொண்டே கொஞ்சம் விரைசலாகவே நடந்துவந்தான். கொஞ்ச தூரத்தில் எதையோ கீழே குனிந்து எடுத்துக்கொண்டு வருவதையும் கண்டான். வீட்டிற்கு முன்னால் அவன் வருவதும் அவனுடைய தகப்பன் வருவதும் சரியாயிருந்தது.

"அடே, என்கையை விட்டு எங்கே நழுவப்பாக்கறே! அரை அணுக் குடித்தில்லே ஒன்னே வாங்கியிருக்கேன். சீச், மூச்சுண்ணு கத்துதியா," என்று சொல்லிக்கொண்டே வாயில் வைத்துக் கடிக்கப் போனான். (அவன் வரும் பொழுது கையிலிருந்த வடை கீழே நழுவி விழுந்துவிட்டது. அதற்குப் பதில் அங்கே பக்கத்தில் பதுங்கிக்கிடந்த தவளையை எடுத்துக்கொண்டிருந்தான்.) இதைப் பார்த்த காத்தானுக்கு சகிக்கவில்லை; தகப்பனுடைய கையைத் தட்டி

ஞன். தவளை கீழே விழுந்துவிட்டது, "என்னது? தவளையே வச்சுக்கடிக்கிறே? இந்தக் குடியே நிறுத்துண்ணும் கேக்கமாட்டேங்கறே, சீ ! மனுசனு, இல்லே மிருகமா ?" என்றான்.

சாம்பானுக்குக் கோபம் குடிவெறி இரண்டும் சேர்ந்தது. "ஏலே வாண்டுப் பயலே, எனக்கா புத்தி சொல்றே? களுதே நேத்து மொளச்ச பய, புத்தி சொல்றானும் புத்தி! எடுவாரியல்" என்று சொல்லிக்கொண்டே, பளீரென்று காத்தானின் கன்னத்தில் அறைந்தான். காத்தானுக்கும் கோபம் வந்துவிட்டது. சட்டென்று தன் தகப்பனைக் கீழே தள்ளி, வயிற்றில், காலால் ஒருதடவை உதைத்துவிட்டான். இதைப் பார்த்த அவன் தாய் உள்ளிருந்து ஓடியே வந்து, "அட பாவி மவனே ஒங்கையாவை ஏண்டா ஒதைங்கறே" என்றாள்.

"ஏனு ! எங்கன்னத்தைப் பாரு, நல்லாக் குடிச்சிட்டு ஒரு தவளையைக் கொண்ணுந்து கடிச்சுக்கிட்டு இருந்தது, நான் தவளையைக் கடிக்காதேண்ணத் துக்கு, என்னைப் பேயறையறுப்பலே அறைஞ்சுது !" என்றான்.

"ஐயோ பாவம், அது குடிவெறிலே சேஞ்சுடுத்து, அது குடிக்காதே இருக்கறப்போ, ஈ எறும்புக்குக்கூட தும்பம் நெனேக்காதே" என்றாள்.

"ஆமா அதுக்குத்தாஞ் சொல்றேன். இந்தப் பாளும் குடியை விட்டுடேண்ணுட்டு."

மாரியாயி ஒரு பெருமூச்சு விட்டு "அது எங்கே குடிப்பளக்கத்தை விடப் போவுது" என்றாள்.

உடனே காத்தான் "ஆமா அது என்ன சொல்லியும் கேக்கல்லே, நேக்கு வர வர இங்கிட்டு இருக்கவும் புடிக்கல்லே, இதோ கள்ளு காத்தம் வயத்தைக் கொமட்டுது, அது எளுந்திரிச்ச ஒடனே நீ சொல்லு, ஒஞ்சின்னமவன் காத்தான் செத்துட்டான், நீ குடியே ஒளிச்சாலொளிய ஓம் மொகத்துலே முளிக்கமாட்டேன்னுட்டான், பாரு ஆறோ, கொளமோ, எனக்குத் தெரியாது நாம் போறேன்" என்று சொல்லித் தன் தாயின் பதிலையும் எதிர்பாராமல் விடு விடென்று நடந்து போய்விட்டான். எங்கு போய்த் தேடுவது, எப்படி சமாதானம் சொல்லி அழைத்து வருவது, பெரிய மகனும் பக்கத்து ஊருக்குப் போயிருந்தான். பாவம் இரவெல்லாம் அழுதே கழித்தாள்.

ஜில்லென்ற காலைக்காற்றுப் பட்டவுடன் மெள்ள எழுந்திருந்து முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தான், சாம்பான்.

அவனுக்கு முதல்நாள் நடந்தது ஒன்றுமே ஞாபகம் இல்லை. மாரியாயி அழுதுகொண்டே ஏதோ வேலையாக வாசற் பக்கம் வந்தாள்.

"இம்மாங்காத்தாலே ஏம்புள்ளே அளுவுறே" என்று சாம்பான் கேட்டான்.

"ஆமா ! ஒன்னெக் கட்டிக்கிட்டதுக்கப்புறம், அளுகையில்லாமலே சிரிப்பா ! இப்ப வந்து மனிசனாட்டம் பேசறே, நேத்திராவு பேயாட்டம் ஆடினே, காத்தான் நம்மெ விட்டுட்டுப் போயிட்டான். நீ இன்னமே குடிச்சிண்ணு ஓம் மொகத்துலேயும் முளிக்கமாட்டானும்" என்று தேம்பிக்கொண்டே சொன்னாள்.

திடுக்கிட்ட சாம்பான், "என்னது ! காத்தானு ? ஓடிட்டானு ? ஐயோ எம் மவனே" என்றான். பிறகு முன் தினம் நடந்ததெல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் மாரியாயி சொன்னாள். சாம்பானுக்குக் காத்தானிடம் உள்ளூற பிரியம் அதிகம். சோம்பல் என்பதே கிடையாது. தகப்பனும், மகனுமாக வேலைக்குப் போனால் எத்தனையோ தடவை தகப்பன் வேலையையும் சேர்த்தே செய்துவிடுவான் காத்தான். தன் வரும்படியையும் அப்படியே கொண்டுவந்து தாயிடம் கொடுத்துவிடுவான். அனேக நாள் அவனுடைய வரும்படியால் வயிறார உண்டுகொண்டிருந்தார்கள். சாம்பான்—"நீ என்னு சொன்னே? நாங் குடிச்சா எம்மொகத்துலேயும், முளிக்க மாட்டங் காத்தாண்ணு சொன்னே, இல்லே? இன்னமே நாங் குடிக்கவே மாட்டேன்" என்றான்.

"இப்போ என்னவேண்ணுலுஞ் சொல்லுவே, சாங்காலம் இல்லே பாக்க னும், ஒங்கூத்தே, ஒன்னாலே எனெடை அருமைப் புள்ளெயே, எளங்தேன்" என்று சொல்லிக்கொண்டே, உள்ளே போய்விட்டாள்.

சாயங்காலம் அன்றைய தினத்துக் கூலி எல்லாவற்றையும் கொண்டுவந்து மாரியாயியின் கையில் கொடுத்தவுடன், மாரியாயிக்கு சந்தோஷம் தாங்கவில்லை. "நீ இண்ணைக்கிப் போவல்லே? கள்ளுக் கடைப்பக்கம் போவல்லே?" என்று சொல்லி ஆச்சரியப்பட்டாள்.

இப்பொழுதெல்லாம் சாம்பான் கள்ளுக்கடைப் பக்கம்கூடப் போவதில்லை. சாம்பான் கூலி வேலை தவிர மற்ற நேரத்தில், தன்வீட்டைச் சரிப்படுத்து வதிலேயே, காலத்தைக் கழிப்பான். குடிசைக்குப் புது ஓலை வேய்ந்து, ஒழுகாமல் செய்து கொண்டான். குடிசையைச் சுற்றி முள்வேலி போட்டுக் காய்கறித் தோட்டம்கூடப் போட்டுவிட்டான். இப்பொழுதெல்லாம் வயிறார, இரண்டு வேளை சாப்பாடும், கிழிசலில்லாத துணியும் சாம்பானின் குடும்பத்திற்குக் கிடைக்கிறது.

அவனுக்கு ஒரேஒரு குறைதான். தன் மகனிடம் எப்படிச் செல்வது, அவனை எங்கே போய்த் தேடுவது. இரவும் பகலும் நினைத்து நினைத்து ஏங்கினான். சில நாள் தூக்கத்தில்கூட, "காத்தான்! காத்தான்! நான் குடியை விட்டுவிட்டேன். வரமாட்டியா! நாங் கள்ளுக்கடைப் பக்கம்கூடப் போவமாட்டேன், என்னை மன்னிச்சுப்புடு" என்று புலம்புவான். அவனுடைய மனைவிக்குக்கூட அவனிடம் அளவுகடந்த அனுதாபம் உண்டாயிற்று.

* * * *

வீட்டைவிட்டுப் போன காத்தான், தன் கால்போன வழியே நடந்து போனான். அமாவாசை இருட்டு, ரயிலின் கூ என்ற சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான். அவன் பக்கத்து ஊர் ரயில் ஸ்டேஷனில் நிற்பதை உணர்ந்தான். வந்து நின்ற ரயிலின் ஒரு பெட்டியில் ஏறிவிட்டான். இருட்டில் ஒருவரும் அவனைக் கவனிக்கவில்லை. ரயிலும் புறப்பட்டுவிட்டது. விடிந்து வெகு நேரமாகியும் ஒரு டிக்கட் பரிசோதகரும் அவனைக் கவனிக்கவில்லை. ஏதோ சரி. இனி இருந்தால் ஏதாவது ஆபத்து வந்துவிடும் என்று நினைத்துக் கொண்டிருக்கையிலே ரயில் நின்றது. இங்கேயே இறங்கி விடுவோம் என்று உத்தேசித்து இறங்கப் போனான். இதற்குள் வெளியிலிருந்து ஒரு பெரியவர் அவனை இறங்கவொட்டாமல், முண்டியடித்துக்கொண்டு ஏறினார். ரயிலும் புறப்பட்டுவிட்டது. காத்தான் சோர்ந்து! உட்கார்ந்துவிட்டான். "அப்பாடா" என்று சொல்லிக்கொண்டு பெரியவரும் சௌகரியமாய் உட்கார்ந்து கொண்டார். காத்தானைப் பார்த்து, அவருக்கு என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. "அப்பா! நீ எந்த ஊருக்குப் போகிறாய்?" என்று கேட்டார். இந்த ரயில் எந்த வழியாக எந்த ஊருக்குப் போகிறதென்று காத்தானுக்குத் தெரியாது. காத்தானுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை; விழித்தான். பெரியவர் அறிந்துகொண்டார். "அப்பா, உன்னிடம் டிக்கட் இல்லையா! இதற்கு அடுத்த ஊரில் நான் இறங்கப்போகிறேன் நீயும்இறங்கிவிடு. டாணுக்காரர்கள் பார்த்தால் உன்னைச் சும்மாவிடமாட்டார்கள்" என்றார். அதற்குள் அடுத்த ஊரும் வந்துவிட்டது. பெரியவர் ஸ்டேஷன் பக்கமாக இறங்கினார். காத்தான் மறு பக்கமாக இறங்கினான். காத்தானுக்குக் கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல் இருந்தது. போதாததற்கு நேற்றுக் காலையில் கொஞ்சம் பழயகஞ்சி குடித்தது. ஸ்டேஷனைச் சுற்றிக்கொண்டு வெளியே வந்தான். இவன் வருவதைப் பார்த்த பெரியவர் அவனிடம் வந்து "அப்பா, உனக்கு எந்த ஊர், இங்கே எங்கு வந்தாய், நீ சாப்பிட்டு எத்தனை நாளாயிற்று?" என்று அன்புடன் கேட்டார். அவன் தன்னுடைய கதையையெல்லாம் சொல்லிக் கோவென்று குழந்தை மாதிரி அழுதுவிட்டான்.

அந்தப் பெரியவர் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடுபவர். அந்த ஊரில் சங்கம் ஒன்று ஏற்படுத்தி, அதில் அனாதைகள், தீண்டாதார்கள், இவர்களுக்குப் படிப்புச்சொல்லிக்கொடுப்பது, நூல் நூற்கக் கற்பிப்பது, கைத்தொழில் வேலை செய்யப் பழக்குவது, இதெல்லாம் செய்கிறார். அவர் அவனை முதுகில் தட்டிக்கொடுத்து "பயப்படாதே. என்னுடன் வந்து என் சங்கத்தில் சேர்ந்து நீயும் உபயோகமான 'வேலைகளைச் செய்" என்று சொல்லி அவனைக் கூட்டிக் கொண்டு போனார். சங்கம் என்ற இடத்தைப் பார்த்தவுடன் சொர்க்கத்துக்கே வந்துவிட்டோமா! என்று எண்ணினான் காத்தான். தினம் காலையிலெழுந்து குளித்துவிட்டு தூய ஆடை அணிந்து ப்ரார்த்தனை செய்வதைப் பார்த்த காத்தான், தன் சேரியை நினைத்து, இதே மாதிரி நம் சேரியும் ஆகும் நாள் வருமா என்று நினைத்துக்கொண்டான்.

ப்ரார்த்தனைக்குப் பிறகு அவரவர்களுடைய வேலைக்குப் போவது. சங்கத்தில் சேர்ந்த சிலநாளைக்கெல்லாம், அவனை எல்லோருக்கும் பிடித்துவிட்டது. அவன் சோம்பல் என்பதே இல்லாமல் சதா ஒன்றில்லாவிட்டால் இன்னொரு வேலை செய்துகொண்டே இருப்பான். தினம் சேரிக்குப் போய், சேரியைச் சுத்தம் செய்வது, குடிப்பவர்களைத் தடுத்து அவர்களுக்குப் புத்திமதி சொல்வது, இவை சங்கத்தின் முக்கிய வேலை. இந்த வேலையில் காத்தானும் பங்கு எடுத்துக் கொண்டான்.

காத்தான் வந்ததிலிருந்து சேரி மனிதர்கள்கூடத் திருந்த ஆரம்பித்தார்கள்.

சேரிக்குத் தவறாமல் போவான் அதற்குக் காரணம் ஆண்டான் மகள் முத்திதான். முத்தி இவனைவிட ஐந்து வயது சிறியவள். துறு துறுவென்றிருப்பாள். இவனிடம் தினம் படிப்புச் சொல்லிக்கொள்வாள்.

இப்படியே எட்டு வருஷங்கள் ஆயிற்று. முத்தி இப்போ கொஞ்ச காலமா, இவனிடம் படிப்புச் சொல்லிக்கொள்ளக்கூட வருவதில்லை. இவனைத் தூரத்தில் பார்த்தவுடன் ஓடிவரும் முத்தி, இவனைக் கண்டவுடன், வீட்டிற்குள் ஓடிவிடுவாள். காத்தானுக்கு முத்தி தன்னிடம் கோபித்துக்கொண்டிருக்கிறாளோ என்று தோன்றிற்று. பிறகு விஷயம் தெரிந்தது. அவளுடைய தகப்பனைக் கேழ்க்க வெட்கம். பெரியவரிடம் எப்படிச் சொல்வது? தவித்தான்.

ஒரு நாள் பெரியவர் காத்தானை தன்னுடைய அறைக்குக் கூப்பிட்டுவிட்டார்: இவன் அங்கே போனபொழுது ஆண்டானும் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

பெரியவர்—"காத்தா, உன்னை நான் இவ்வளவு நாளாக வைத்துக்கொண்டு போஷித்ததற்கு ஆண்டானின் சொத்தைத் திருடிவிட்டாயல்லவா! அவனிடம் நீ போய்க் கேட்டால் கொடுக்கமாட்டானா, உனக்காகத்தானே வைத்திருக்கிறான்" என்றார். காத்தான் ஒன்றும் தெரியாமல் விழித்தான். "ஐயோ! இப்பொழுதெல்லாம் அவர்கள் வீட்டிற்கு நான் அதிகம் போவதில்லையே" என்றான். பெரியவரும் ஆண்டானும் சிரிக்க ஆரம்பித்தார்கள்.

பெரியவர்: "அட காத்தா, போ உனக்கும் முத்திக்கும்வரும் வெள்ளிக்கிழமை கல்யாணம் செய்ய உத்தேசித்திருக்கிறோம், சம்மதம்தானே?"

தலையைக் குனிந்து கொண்டான் காத்தான். காத்தானுக்கும் முத்திக்கும் விவாகமாயிற்று. இன்னும் இரண்டு வருஷங்கள் ஓடி மறைந்தன. காத்தானும் ஒரு குழந்தைக்குத் தகப்பனானான். குழந்தையைப் பார்க்கும் பொழுதெல்லாம் தன் தாயார் தகப்பனாரை நினைப்பான். அவன் செய்த சபதம் அவனை ஊருக்குப் போகாமல் தடுத்தது. தன் தகப்பன் இன்னும் குடிப்பதாகவே நினைத்தான்.

முத்தி ஒருநாள் தன் கணவனிடம் வந்து இதோ பார்த்தீர்களா? உங்கள் ஊரில்கூடக் கள்ளுக்கடைகளை, மூடிவிடப் போகிறார்களாம். இனிமேல் உங்க

ளுடைய தகப்பனுர் குடிக்கிறேனென்று சொன்னுல்கூட முடியாது," என்றுள். காத்தானும் பத்திரிகையை வாசித்து விட்டு, சரி இனிமேல் நாம் நம்முடைய ஊருக்குப் போய் எல்லோரையும் பார்க்க லாம் என்று சொல்லும் போதே அவனு டைய ஒரு வயதுக் குழந்தை தவழ்ந்து கொண்டே வந்து அவன் காலைப்பிடித் துக் கொண்டே நிற்க முயற்சித்தது.

தன் தகப்பன் வேலைசெய்யும் பண்ணை யாருக்கு தான் இருக்குமிடத்தைத் தெரி வித்தும் தன்னுடைய கதையையும், தன் தகப்பனைப் பார்க்க அக்டோபர் மாதம் 5 ஆம் தேதி அங்கு வருவதாயும், தயவு செய்து தன் தகப்பனிடம் தெரிவிக்கும் படியும் எழுதியிருந்தான்.

மறுதினம் வேலைக்கு வந்த சாம்பா னிடம் கடிதத்தை, வாசித்துக் காட்டி ஞர் பண்ணையார். சாம்பானுடைய சந் தோஷத்திற்கு அளவே யில்லை. வீட் டிற்க்கு வந்து தன் மனைவியிடம் சொல் லிப் பெருமைப்பட்டுக் கொண்டான்.

இதையெல்லாம் நினைத்துக் கால்அலம் பக்கூட மறந்து உட்கார்ந்திருந்தான். காத்தானும் தன் அண்ணனிடமிருந்து விஷயத்தை யெல்லாம் தெரிந்து கொண் டான். 'அப்பா' என்ற சத்தம் கேட் டுத் திரும்பினுன் சாம்பான். காத்தான் ஓடியே வந்து தன் தகப்பன் காலில் விழுந்து கும்பிட்டான். சாம்பான் சின் னக் குழந்தையை வாரியெடுப்பது போல் எடுத்துக் கண்ணீர் சொரிந்தான். உள்ளி ருந்து வந்த கிழவி முத்தியிடமிருந்து, குழந்தையை அன்புடன் வாங்கிக் கொண்டு, முத்தியை உள்ளே அழைத் துச் சென்றுள். நிம்மச்சி தன் ஓரகத்தி யிடம் அவளுடைய ஊர் சமாசாரத்தை விசாரிக்க ஆரம்பித்தாள்.

மதிப்புரை

## படிப்பதற்கு

சக்தி பிறக்குது முதலிய பாடல்கள். தொகுத்தவர் : சுரபி. வெளியீடு : சக்தி காரியாலயம், சென்னை 14. விலை அணு 0 - 6 - 0

இச்சிறு தொகுதியில் காணப்படும் பதினைன்கு பாடல்களும் கருத்துடனும், எளிய நடையிலும் அமைந்துள்ளன. தமிழ்நாட்டிற்கு நன்கு பரிச்சய முள்ள சுரபியின் இப்பாடல்கள் பள்ளிச் சிறுவர், சிறுமியர் வாயிலாக நாட்டில் பரவக் கூடியவை.

திருப்பாவை: ஆசிரியர் பி. ஸ்ரீ. வெளி யீடு : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப் பூர், சென்னை 4. விலை 1 - 8 - 0.

தமிழன்பர்களுக்குப் பி. ஸ்ரீயின் இனிய தமிழ் நடையைப்பற்றிப் புதிதாக எடுத் துக் கூறவேண்டிய அவசியமில்லை. திருப் பாவை என்கிற இந்நூலில செறிந்து கிடக்கும் மதுரமான விஷயங்கள் பி. ஸ்ரீயின் தெள்ளிய நடையால் அதிகமாகச் சோபித்து விளங்குகின்றன. படிக்கப் படிக்க இனிக்கும் இப்புஸ்தகத் திற்கு ஸர்விஸ் கமிஷன் தலைவர் திவான் பகதூர் ஸ்ரீ டி. எம். நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல். அவர்கள் சிறப்புரை அளித்திருக்கிறுர் என்ப தோடு, இது அல்லயன்ஸ் வெளியீடு என்றுல் இதன் உயர்வைப்பற்றி வேறு என்ன கூறவேண்டும் ?

# நான் " சந்திரலேகா " போய்ப்பார்த்த கதை

கா. வே. சுப்பிரமணியன்

வெள்ளிக்கிழமை, பகல் 12 மணி இருக்கும். ஏப்ரல் மாதம் 9-ம் தேதி. தமிழ்நாட்டில் ஏப்ரல் மாதம் 9-ம் தேதி இப்பொழுது பெற்றிருக்கும் புது வெற்றி எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தானே! ஏப்ரல் 13-ந்தேதி தமிழ் வருஷப்பிறப்பின் மகிமையைக் கூட அடியோடு முறியடித்துவிட்டது.

நவநாகரிகத்தில் விளம்பரச் சக்கிரத்தின் மகிமையே மகிமை! அதுவும் ஜெமினி கையில் விளம்பரத்திற்கு ஒரு தனி சக்தி!

கடுமையான வெயில். புழுக்கம் அதிகம். மிக்க சோம்பலாயிருந்தது. மணி 12. இன்னும் சாப்பிடவில்லை. ஹோட்டலுக்குப் போய்க் கிடைத்ததைச் சாப்பிட்டு விட்டு (ஏப்ரல் மாதம் 9-ம் தேதி யாருக்குத்தான் பட்டினி, பசி தெரிந்தது?) வெல்லிங்டன் தியேட்டருக்குப்போய் 'சந்திரலேகா' படத்திற்கு டிக்கட் வாங்கி, பிழைத்திருந்து, படத்தையும் பார்க்க வேண்டுமே என்ற ஆயாசத்திலே என் குழந்தை மனம் சோர்ந்தது. 35 லட்சம் ரூபாய் விழுங்கிய சந்திரலேகாவை ஆரம்பதினத்தன்றே பார்க்காமல் எப்படி இருப்பேன்? சோம்பலை முறித்து உதறிவிட்டு ஹோட்டலை நோக்கி விரைவாய் ஓடினேன். அன்று ஹோட்டலிலேயும் சந்திரலேகா பேச்சுத்தான். சோற்றில் கல்லும், மண் கட்டியும், உமியும் கொஞ்சம் அதிகம் தான். ஏப்ரல் 9-ம் தேதியில் எல்லாம் அப்படித்தான்; சந்திரலேகாவுக்கு டிக்கட் வாங்க வேண்டாமா? தமிழ்ப் படம்; அதிலும் ஜெமினி தயாரிப்பு. ஸ்ரீ வாஸன் முன்னின்று தானே தயாரித்தது என்றாலே தமிழகத்தில் பிறந்தவர்களுக்கு இதைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலுக்குக் கேட்பானேன்?

'அவசரக்கோலம் அள்ளித் தெளித்தது' என்பது போல பெருக்குச் சாப்பிட்டுவிட்டு டிராம் ஏறினேன். பக்கத்தில் உட்கார்ந்தவரின் கை கடிகாரத்தைப் பார்த்தேன். மணி 12-30 ஆய்விட்டது. டிராம் வண்டியோ எறும்பு போல் ஊர்ந்துகொண்டிருந்தது. வெல்லிங்டனுக்குக் குறிப்பிட்ட நேரத்திற்குள் போய்ச் சேருமோ என்று பயந்தேன். 1 மணிக்குக் காட்சி. வெல்லிங்டனுக்குப் போய்ச் சேர்ந்தேன். டிராம் பூராவிலும் அந்த சினிமாவுக்குப் போகும் ஜனக்கூட்டம் தான்! ஒண்ணேகால் ரூபாய் டிக்கட—இரண்டு சாப்பாட்டுக்கு மேல் ஆகிறது—வாங்கலாமோ என்று எண்ணினேன். ஆனால், அதில் டிக்கட் குறைவு. க்யூவில் நிற்பவர்கள் அதிகம்; காட்டு எறும்பு வரிசைபோல் நின்றிருந்தனர் ஜனங்கள். அதிலும் வெயிலில் தான் நிற்கவேண்டும். பதினைந்தணா டிக்கட்டே போதுமென்று தீர்மானித்து ஒற்றைக் காலால் வெயிலில் நின்று வாடும் க்யூவில் போய்ச் சேர்ந்தேன். எட்டு மணிக்கே கட்டுச் சோற்றுடன் பலர் வந்து க்யூவில் முன் ஸ்தானங்களைப் பற்றிக்கொண்டிருந்தனர். வெயில் மண்டையில் உறைக்க உறைக்க நான் சிந்தனைத் தொடரில் ஆழ்ந்தேன். நல்ல படம் பார்த்து மனம் களிக்கவேண்டுமென்றால் அதற்கு ஈசன் விதித்த கஷ்டங்களைப் பட்டுத்தானே ஆகவேண்டும்? 35 லட்ச ரூபாயின் சாராம்சத்தைப் பதினைந்தணா கொடுத்து அனுபவிக்க வேண்டுமென்றால்! இப்படிச் சிந்தனை செய்து தொடரில் நின்று மனதைத் தேற்றிக் கொண்டேன். வெயிலுக்கும் சிந்தனைக்கும் மிக்க நட்புபோலிருக்கிறது!

இந்த சினிமா டிக்கட் வாங்கும் தொடரிலும் இரண்டு வகுப்புகள் இருந்தன. உண்மையில், என்னைப்போல் படம் பார்க்க வந்தவர்கள் ஒரு வகுப்பு; டிக்கட்டைக் கஷ்டப்பட்டு வாங்கி அன்னியருக்கு—சட்டை கசங்கிப்போய்விடுமே

என்று தொடரில் நின்று வாங்க இஷ்டமில்லாதவர்களுக்கு—அதிக விலைக்கு விற்று வியாபாரம் செய்யும் நபர்கள் இன்னொரு வகுப்பு. இந்த இரு வகுப்புகளுக்கும் ஹிந்து....முஸ்லிம் போல் எப்பொழுதும் க்யூவில் சண்டைதான். அரக்கர்களே வலுத்து தேவர்கள் தோல்வியடைவதைப் பார்த்து சகிக்க முடியாமல் கடைசியில் நான் கைதைரியம் இல்லாவிட்டாலும், வாயால் கூச்சலிட்டுப் போலீஸை அழைத்தேன். போலீஸ் கண்ணை மூடிக்கொண்டே க்யூவின்பேரில் பிரம்பால் ஓர் அடி போட, தப்புச்செய்தவர்கள் செய்யாதவர்கள் எல்லோர் பேரிலும் மழைபெய்வது போல—அந்த இடத்தில் க்யூஜாடாவும் கலைந்து மறுபடியும் புதிதாய் ஏற்பாடு ஆகும்போது தைரியமில்லாமல் பயந்த பழைய நபர்கள் இடத்தை இழந்து டிக்கட் வியாபாரம் செய்யும், காலின் கீழ் நுழையும் புது குண்டர்களுக்கு இடம் கொடுத்தார்கள். இதுதான் போலீஸ் காபந்தாலும் மத்தியஸ்தத்தினாலும் விளையும் பயன்-நியாயம்! காலையிலிருந்து நின்று வருபவர் போலீஸ் அடிக்குப் பயந்து தாம் காப்பாற்றிய இடத்தை குண்டர்களுக்கு இழப்பது!

சுமார் இரண்டரைமணி ஆயிற்று. ஏதோ கொஞ்சம் நிழலோரம் கண்டு அதனடியிலேயே பதினைந்தணா டிக்கட்டுக்கே ஓர் இரண்டாவது தொடர் புதிதாய் ஏற்பட்டது. டிக்கட் கொடுக்கும் சமயம் வந்த பொழுது மறுபடியும் போலீஸ் வந்து, இரண்டு க்யூ உதவாது என்று தீர்மானித்துப் பழைய க்யூவைக் கலைத்துவிட்டுப் புதிய க்யூவை ஆமோதித்தது. இது என்ன நியாயம் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதுவும் பிராரப்த கர்மாதான்-சந்திரலேகாவுக்கு டிக்கட் வாங்குவது போல்! இந்தக் குழப்பத்தில் புதிய க்யூவைப் பல இடங்களில் கலைத்துக்கொண்டு பழைய க்யூக்காரர்கள் இடுக்கில் புகுந்தார்கள். போலீஸ் பிரம்படியும் அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்குக் கிடைத்தது! நான் பூர்வ புண்ணியத்தால் தப்பினேன்!

பகிரதன் கங்கை கொண்டு வந்தது போல டிக்கட் வாங்கி தியேட்டருக்குள் நுழைந்தேன். 'அப்பாடா' என்று அயர்ந்தேன். 'சுவர்க்கலோகம்' போலிருந்தது. இவ்வளவு பாடுபட்டு டிக்கட் வாங்கிய என் மனக்கண் முன் சந்திரலேகா படம்—முப்பத்தைந்து லட்ச ரூபாய் படம்—வந்து நின்றது. சிறிது நேரத்தில் திரையில் படம் ஓட ஆரம்பித்தது!

சந்திரலேகாவைப் பற்றி விமரிசனம் எழுதும் பேர் வழி நான் அல்ல. கற்பனை செய்து எழுத எனக்கு வயது போதாது. டிக்கட் வாங்கின கதையைத்தான் நான் என் நண்பரான ஒரு ஜில்லா ஜட்ஜிடம் சொன்னேன். அவருக்கு இன்னும் டிக்கட் கிடைக்கவில்லை. அவர் மிக்க நல்லவர். "டிக்கட் வாங்கும் கதையையே நீ ஒரு கட்டுரையாக எழுதேன்" என்று அவர் என்னிடம் சொன்னார். அவர் உயிர் மூட்டிய அவாவினால்தான் இதை எழுதினேன். என் முதல் கட்டுரை இது. பத்திரிகையில் பிரசுரமானால், நான் வெயிலில் நின்று, போலீஸ் பிரம்புக்குப் பயந்து க்யூவில் நின்று, சந்திரலேகாவுக்கு பதினைந்தணா டிக்கட் வாங்கின கஷ்டம் பூராவும் நிவர்த்தியாகும்.

சந்திரலேகாவில் யானை பாறையை இழுப்பது மிக்க உருக்கமாயிருந்தது. சர்க்கஸ் மானேஜர் சொல்லும் பொய்க் கணக்கு மிக்க அருமையாக இருந்தது. சர்க்கஸ் பியூன் கரடி வேஷம் போட்டு நடித்து வரும்பொழுது நிஜக்கரடியையே தோற்கடித்து விட்டது. சந்திரலேகாவுக்குப் பதினைந்தணா டிக்கட் வாங்க போலீஸ் பிரம்புக்கு பயந்து வெயிலில் நின்ற நான் ஒரு தமிழ்நாட்டு இளைஞன்; எழுத்தாளனாக மாறிய கதை எல்லாவற்றையும் தோற்கடித்து விட்டது. ஸ்ரீ வாசனே அடுத்த படத்திற்கு கவனிக்கத் தக்கது இது: பணச் செலவு செய்து வேறு கதை தேட வேண்டாம்!

# நிம்மதி

ஆர். எஸ். மூர்த்தி

நிம்மதி அவசியம். ஆம். யாருக்கு நிம்மதி அவசியம்? எதற்காக? எப்பொழுது? அதனால் யாது பயன்? இவைகளை ஆராயுங்கால் அது ஒரு பெரிய பிரச்னையாகத்தானிருக்கின்றது. உண்மைதான். அவசியத்திலும் அவசியமாகத் தான் ஒவ்வொருவருக்கும், எந்த நேரத்திலும் நிம்மதி வேண்டியிருக்கின்றது. நிம்மதி வேண்டுமென்றால் பலசரக்குக் கடைக்குப் போய் வாங்கும் சாமானா அது? இல்லை. ஒவ்வொருவரும் நிம்மதியாக இருக்க வேண்டுமென்பதுதான் அதன் பொருள். சில சமயங்களில் மாத்திரம் நிம்மதியாய் இருந்தால் போதுமா? எப்பொழுதுமே நிம்மதியாக இருக்கப் பழகவேண்டும். எந்த சந்தர்பத்திலும், இடையூறு ஏற்படினும், துன்பம் நேருங் காலத்திலும், கவலையுறும்பொழுதும் அவ்வப்பொழுதெல்லாம் அவைகளை வரவேற்றுப் பின், அவைகளை ஒருபுறம் ஒதுக்கி, சந்தோஷத்தையும் வருவித்துக் கொள்ளவேண்டும். சந்தோஷமாய் இருக்க வேண்டுமென்பதற்காக எல்லோரிடத்திலும் போய் சிரித்துக்கொண்டும், விளையாடிக்கொண்டுமிருப்பதா? மனம் சந்துஷ்டியாக இருக்கவேண்டும். மனம் ஆனந்தமாக, களங்கமற்று, ஒரு நிலையிலிருக்குமாயின் நிம்மதி தானே ஏற்பட்டுவிடும். நிம்மதியாக இருக்கும் வேளைகளில் எவ்வளவோ அரிய பெரிய காரியங்களைச் செய்யலாம்; சாதிக்கலாம்.

எடுத்துக் காட்டாக, ஓர் கவிஞனையோ எழுத்தாளனையோ, ஓவியனையோ எடுத்துக்கொள்வோம். அவர்கள் இல்லறத்தாராயினும் துறவறத்தாராயினும் சரி, அவர்கள் வாழ்க்கையிலே நிம்மதியாக இருந்தால்தான் அவரவர்கள் தொழிலை விருத்தி செய்யவும், சந்தோஷமாக இருக்கவும் இயலும். கவிஞன், தனக்கென்று ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தனியறையில், ஆசனத்திலமர்ந்து, மணங்கமழும் ஊதுவர்த்திகளை ஏற்றிவைத்துக்கொண்டு கவிபுனைய கருத்துக்களை வருவித்துக்கொண்டிருக்கின்றான். தைலதாரைபோல் அவன் மன ஊற்றிலிருந்து ஊறிக்கொண்டு, "நான் முந்தி, நீ முந்தி" என கவிகள் ஓடிவந்து ஏட்டில் பதிந்துகொண்டிருக்கின்றன. அவ்வேளையில்தான் கவிஞனின் மனைவி மிக அவசர அவசரமாக அருகில் வந்து, "இன்றைக்குப் பருப்பில்லை, புளியில்லை - வாங்கவேண்டும்" என்பாள். இவளைக் கொஞ்சம் புத்திசாலி என்று கொள்ளவேண்டும். இன்னும் சில அறிவிலிகள் கவிஞனுக்கு மனையாளாகவாய்த்திருந்தாளேயானால் எழுதிக்கொண்டிருக்கும்போதும், சிந்தனை செய்யுங்காலும் கடுகடு, சிடுசிடு என்றுசீறி விழுவாள். அப்போது சிந்தனைகள் சிதறி, உள்ளத்திலிருந்து உதித்த ஒவ்வொரு ஜீவ அணுவான கருத்துக்கள் நிறைந்த பொருள்களும் ஓடி ஒழிந்துவிடும். அப்போது அவன் மனம் மாறுகிறது. கவலை ஏற்படுகிறது. குடும்ப சாகரத்தில் அமிழ்த்தப்பட்டுவிடுகின்றான். நிம்மதி குலைகிறது. இருவருக்கும் சச்சரவு ஏற்படுகிறது, சில வினாடிகளில். அதன் பயனாக ஒரு சில நாள் கஷ்டமுற்றுக் கவலையை அனுபவிக்கின்றான். அப்போது அவனுக்கு எங்கனம் நிம்மதி ஏற்படும்?

இல்லறத்தானுக்குத்தான் இவ்வித நிலை. துறவறத்தானை கவனிக்குங்கால் அவனுக்கும் சிற்சில வேளையில் துன்பம் வந்து சூழ்கின்றது. ஆஸ்ரமம் அமைத்துக்கொண்டு சிஷ்ய கோடிகளுக்கு உபதேசித்துக்கொண்டிருக்கின்றான் துறவி. சிஷ்ய கோடிகளுடன் உல்லாசமாக இருப்பதும், தனித்து தியானித்து வருவதும்தான் அவன் வாழ்க்கையில் அனுபவிக்கும் இன்பம். ராஜோபசாரணையில் இருப்பான் துறவி. சிற்சில பொறாமைக் கூட்டம் "அத்துறவி அந்த வேளையில் அப்படி நடந்தான், இப்படி இருந்தான்" என்ற தவறான எண்ணங்களை மக்-

களிடையே கிளப்பிவிட்டு விடுவார்கள். அதிலிருந்து பல காரணங்களைக்கொண்டு ஆஸ்ரம கட்டடத்திற்கும்,நிலத்திற்குமே ஆபத்து ஏற்பட்டு விடுகிறது. துறவி யினல் சும்மாயிருக்க முடியுமா! ஆஸ்ர மத்திற்கும், வக்கில் வீட்டிற்கும் நடக்க சந்தர்ப்பம் ஏற்பட்டு விடுகிறது. பின்னர் நீதி ஸ்தலத்திற்கும் சென்று கூண்டில் ஏறி பதில் சொல்லும் நிலையும் உண்டா கின்றது. பின்னர் கவலையும் கஷ்டமும் சூழ்கின்றன. துறவி எவ்வாறு நிம்மதி யாய் இருக்க இயலும்?

எழுத்தாளன் ஒரு சிறந்த கற்பனைக் காதற்சித்திரம் அமைக்க மனேபூமியில் அஸ்திவாரமிட்டுக் கொண்டிருப்பான். காதலனை ஒரு சிறந்த சிற்பியாகவும், காதலியை ஓர் எளிய குடும்பத்திற் பிறந்த ஹரிஜனப் பெண்ணாகவும் அமைப்பான். சிற்பி சிருஷ்டித்த ஓர் அற்புதமான யௌவன மங்கையின் உருவச்சிலை கண் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக் கின்றது. பலர் அதைக் கண்ணுறுகின் றனர். பார்த்து மகிழ்கின்றனர். சிருஷ் டித்த சிற்பியை வாயாற வாழ்த்திக் கொண்டு செல்கின்றனர். அவைகளை எல்லாம், சிருஷ்டி கர்த்தாவாகிய சிற்பி அருகிலிருந்து பிறனொருவனைப் போன்று அனுபவித்துக்கொண்டிருக் கின்றான். அக்கூட்டத்திலே சிறிது கல்வி யறிவுள்ள ஹரிஜனப் பெண் அந்தக் கூட்டத்தில் அவர்கள் கும்பலிலே சிலை யைப்பற்றி வர்ணித்துக்கொண்டு மனப் பூரிப்படைகின்றாள். அதைக் கண்டும், கேட்டும் நின்ற சிற்பியின் உள்ளம் மலர் கின்றது. அவள்மேல் காதல் கொள் கின்றான். அதிலிருந்து கதை ஆரம்ப மாகின்றது. இவைகளை அப்படியே எழுத்தாளன் சிந்தனை ரூபத்தில் உரு வாக்கிக்கொண்டிருக்கின்றான். அச்சமயத் தில்கடன்காரர்களில் சிலர் வந்து அவனை மனவேதனை யடையச் செய்கின்றார்கள். கொடுத்த கடனை அவர்கள் கேட்காமல் இருக்கமுடியுமா? அதனல், எழுத்தாள னுக்கு அவன் எண்ணங்கள் பாதிக்கப் படுமே என்ற நினைவு கடன்காரர்களுக்கு ஏற்படுமா? இவைகளினல் எழுத்தாளன் சிரமப்படுகின்றான், கவலை கொள்கின் றான். உருவாக்கிக் கொண்டிருந்த கற்ப னைச் சித்திரம் கலைந்துவிடுகின்றது. எழுது கோலை எடுத்து மனதை சமா தானப்படுத்திக் கொண்டு எழுத ஆரம் பித்தால் வருணனைகளும், திட்டமிட்ட எண்ணங்களும் வெளிவர மறுக்கின்றன. காரணம் பல தொல்லைகள். இந்நிலையில் எப்படி எழுத்தாளன் நிம்மதி பெற முடியும்?

இவையனைத்தும் நடைமுறையிலேயே நாம் காண்கின்றோம். மனித வாழ்க் கையிலேயோ கணக்கற்ற மாறுதல்கள் ஏற்படுவது இயல்பு. பல இன்னல்களும் சோதனைகளும் ஏற்படுகின்றனவே என்ப தற்காக மனதைக் களைக்க விடக்கூடாது. இடுக்கண்கள் ஏற்படும் காலங்களில் எதுவரினும் வரட்டும் என்று சமாளித் துக்கொண்டு தானிருக்க வேண்டும். அவ்வப்போது ஏற்படும் இன்ப துன்ப மிரண்டையும் ஒன்றாகக் கருதி மனே திடமாக இருக்க வேண்டும். மனதைப் பல இடங்களுக்கும் அலைய விடக் கூடாது. எந்தக் காரியத்தைக் குறித்து மனதைச் செலுத்துகின்றோமோ அக் காரியத்தில் இடையூறு • ஏற்படினும் உடனே குறிப்பிட்ட காரியத்தை முடிக்க வேண்டும் என்ற திட்டத்துடன் மனதை மீண்டும் கொண்டுவர வேண் டும். அதற்கு மனதை நன்றாகக் கட்டுப் படுத்த வேண்டும். நிம்மதி ஏற்பட வேண்டுமென்றால் மனதை அடக்க வேண்டும். அதற்காகத்தான்

"மனம் எனும் மாடடங்கில்
தாண்டவக் கோனே—முத்தி
வாய்த்ததென்று எண்ணுமடா
தாண்டவக் கோனே"

என்கின்றார் இடைக் காடர்.

மற்றும், மனமது செம்மையானல் மந்திரம் ஜெபிக்க வேண்டாம் என் கின்றார் சிவவாக்கியர். காரணம் என்னே? மனம் செம்மையுறுமேயானல் எல்லாம் செய்யலாம். தானே நிம்மதி வரும். எனவே, நிம்மதியாக இருக்க வேண்டு மேயானல், மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். நிம்மதியாய் இருக்க ஒவ் வொருவரும் பழகவேண்டும். எல்லோ ருக்கும் நிம்மதி அவசியமே!

# போகிற போக்கில்



அரசியலைப்பற்றி எழுத மிக்க அவா எனக்கு இருந்தும் உள்ளது உள்ளபடி எழுத மனம் வரவில்லை. தைரியம் வரவில்லை. பத்திரிகை உலகத்திலேயே அரசியலிலிருப்பதுபோல் ஒரு படரும் அடிமைத்தனம் குடிகொண்டு நிற்கிறது. இருந்தாலும் கொஞ்சம் கொஞ்சமாய் இந்தக் கோழைத்தனத்தை ஜெயித்து தைரியமாய் உண்மையை எழுதலாம் என்று நினைக்கிறேன்.

இந்திய சர்க்கார் காஷ்மீர் ப்ரச்னையை ஐக்கிய தேச சபைக்கு (United Nations) கொண்டுபோன தினமே இது ஒரு பெரிய பாக்கியக் குறைவு, நஷ்டம், தப்பு என்று நினைத்தேன். நியாயமும், சாந்தமும் உலவும் ஸ்தலமா இந்த சபை கூடுமிடம்? அரசியல் த்வேஷம் வெறி பிடித்து கள் குடித்த அரக்கன்போல் பேயாடும் ஸ்தலமாகத்தானே அரசியல் ஸ்வயநலத்தை (power politics) கையாண்டு வருகிறது. இந்த க்ஷேத்திரத்திலா நமக்கு நியாயம் கிடைக்கப் போகிறது? அதுவும், அமெரிக்காவும், பிரிடனும் முஸ்லிம் சார்பாக எப்பொழுதும் நிற்கும்போது! மத்திய கிழக்கில் (Middle East) மண் எண்ணெய் சுரங்கம் வற்றாமல் சுரக்கும் வரையில் ஆங்கில-அமெரிக்காவினுடைய முஸ்லிம் கக்ஷி ஆதரவும் நட்பும் பெருகிக் கொண்டேதான் வரும். இதை இறைவன் கூட மாற்ற முடியாது. ஆகையால் எந்த விதத்திலும் பாகிஸ்தானின் நட்பை அடைய வழி தேடுவார்கள். அந்த நட்பைப் பெற காஷ்மீரைப் பாகிஸ்தானோடுதான் சேர்த்து அமைக்க வேண்டும். இந்தியா ருஷ்யாவிடம் நட்புக் காட்டாமலிருப்பதற்கு, காஷ்மீரை பாகிஸ்தானோடு சேர்ப்பதே ஒரு வழிதான். இந்த ராஜ்ய தந்திரத்திற்கு கட்டுப்பட்டுத்தான் ஐக்கிய நாடு சங்கம் தீர்ப்பிட முடியும். ஆகையால் மௌண்ட் பேட்டன் பிரபுவின் புத்திமதிக்கு இணங்கி பண்டிட் ஜவஹர்லால் நேரு காஷ்மீர் ப்ரச்னையை ஐக்கியநாடு சங்கத்திற்குக் கொண்டுபோனதே ஒரு வெகுளி வழி. ஒரு ஏமாற்றம். உலகப் போக்கின் மனோபாவத்தை அறியாமல் செய்த காரியம். இனி என்ன செய்கிறது? சிக்கல் பெருகித்தான் வரும். காஷ்மீரைக் கைவிடாமல் நாமும் காரியத்தை நடத்த வேண்டியதுதான். காஷ்மீரைக் கை விட்டுவிட்டால், நாம் இந்தியாவைக் கோடி கோடி ரூபாய் ராணுவத்தில் செலவுசெய்தாலும் பாதுகாக்க முடியாது. இதுவும் தெரிந்த விஷயம்தான்.

* * *

காஷ்மீர் போகட்டும். ஹைதராபாத் என்ன செய்தி? காசிம் ரஸ்வியும், ராஸாக்காரர்களும் வைத்ததே சட்டம் போல் தோன்றுகிறது. அட்டகாசத்திற்குக் கங்கு கரை கணக்கு இல்லை. பெரும்பான்மையான ஹிந்துக்கள் நீண்ட பேனாக்கத்திகூட அணியக் கூடாது. ஆனால் சொற்பமாயுள்ள முஸ்லிம்கள் துப்பாக்கி, கத்தி, ஈட்டி எல்லாம் இஷ்டம்போல் சேகரித்து அணியலாம். இந்த நியாயம் ஈசனுக்கு அடுக்குமா?

இந்தியா சர்க்கார் பரபரப்புடன் ராஸாக்காரர்களையும் அந்த முஸ்லிமின்-

உல்-இடிஹாட் கோஷ்டியையும் உடனே அடக்காவிட்டால் ஹைதராபாத் தேசம் நாசமாய்ப் போகிறதும் தவிர, இந்தியா யாவையும் பெரும் சுழலில் இழுத்து விடும். ஐயமில்லை. ஜனநாயகத்தை உடனே அவ்விடம் நிலைநாட்டிப் பொது ஜனங்களுக்கு உள்ள உரிமைகளைக் கொடுக்க நைஜாம் ஏற்பாடு செய்யாத வரையில், எல்லாம் ஒரே அழிவாய் முடியும். இந்திய சர்க்கார் தீவிரமாயும், ஊக்கத்துடனும், ஜாக்கிரதையாயும் இந்த விஷயத்தில் தலையிட்டு நிவர்த்தியைத் தேடவேண்டும். இந்தியாவின் ஹ்ருதயம் ஹைதராபாத். அது மெலிவைப் பட்டால் இந்தியாவின் கதி என்ன?

* * *

இந்த இரண்டு ப்ரச்னைகளையும் விட மிக்க அவசரமானதும் முக்கியமானதும் நமக்கு ஜீவாதாரமாயுமுள்ளது ஒன்று இருக்கிறது. மேமீ 17-ம் தேதி நமது சட்ட நிர்ணய சபை (Constituent Assembly) இந்தியாவுக்கு இப்பொழுது தயார் செய்யப்பட்ட சட்ட நிர்ணயத் திட்டத்தை யோசித்துத் தீர்மானிக்கக் கூடுகிறது. தயார் செய்த திட்டத்தைப் படித்து, சிந்தித்துப் பார்த்து ஓர் முடிவுக்கு வர வேண்டிய காலம் பொதுஜனங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இரண்டு மாதம் போதாது. ஆறு மாதமாவது வேண்டும். தவிர, மே மாதத்தில் டில்லியில் ஒருவித பெரிய காரியத்தையும் சாந்தமாய்ப் பரிசீலனை செய்து தீர்மானத்திற்கு வர முடியாது. தாங்காத வெய்யில். உயிரைக் காப்பாற்றினுல் போதும் என்று தோன்றும். ஆகையால் இந்தப் பெரிய விஷயத்தை செப்டம்பர்மீ தள்ளிவைக்கும் படி பாரதமணி கேட்டுக்கொள்கிறது. அன்பர்களும் அப்படியே டில்லிக்கு அந்த சபைத் தலைவர் மகாத்மா டாக்டர் ராஜேந்திரப் பிரஸாதுக்குத் தந்தி அடிக்கவேண்டும்.

இப்பொழுது தயார் செய்யப்பட்ட திட்டம் நமது நாகரிகத்திற்கும், பண்புக்கும், பிராசீன அரசியல் முறைக்கும், வழிக்கும், தர்மத்திற்கும் எவ்வளவு தூரம் ஒட்டி நிற்கிறது என்று அடுத்த இதழில் பார்ப்போம். காந்திஜியின் கொள்கைகளுக்காவது சார்ந்து நிற்கிறதா என்று பார்ப்போம். எனக்குப் புலன்பட்ட வரையில் நமது நாட்டின் வாசனையை ஒட்டின அரசியல் புஷ்பமே அல்ல. தயார் செய்யப்பட்ட திட்டம் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் இந்த தேசங்களிலிருந்து உற்பத்தி செய்து வந்த காகிதங்களைக் கத்தரித்து ஒட்ட வைத்த புஷ்பம் போலிருக்கிறது. தூரப் பார்வைக்குப் புஷ்பம் போலிருக்கிறது. பூமியில் வேர் ஊன்றி உயிர் உள்ள புஷ்பமும் அல்ல, புஷ்பச் செடியுமல்ல. முகர்ந்து பார்த்தால்—வாசனையே கிடையாது. நமது நாட்டின் மல்லிகை, ரோஜா, சம்பங்கி வாசனையே கொஞ்சம் கூடக் கிடையாது. காகிதம்தான் மூக்கைத் துன்புறுத்துகிறது.

இந்த 'லிப்டன்ஸ் டீ'யைப் போல் (Liptons Tea) பல இடத்தில் திரட்டிச் சேர்த்த (blend) சரக்கு தயார் செய்யப்பட்ட திட்டம். களைப்பை 5 நிமிஷம் தீர்க்கலாம். பசி தீராது. நமது நாட்டுக்குப் பசியைத் தீர்க்கும் அன்னம் ஆகாரம்தான் இப்பொழுது வேண்டும். நாட்டிலேயே விளையும் உணவுப் பொருள் மூலம் இந்த அரசியல் பசியை தீர்க்க வேண்டும்.

இந்தப் பெரும் விஷயத்தில் நேரு மந்திரி சபையும், அரசியல் நிர்ணய சபையும் தப்பு முடிவுக்கு அவசரப்பட்டு வந்தால் அதன் பலன் இந்தியாவை 500 வருஷம் பீடிக்கும். தேசத்திற்கு ஏராளமான பலக்குறைவு ஏற்படும். சுயேச்சை கிடைத்தும், ஸ்வராஜ்யம் உண்மையில் இல்லாமல் போய்விடும்.

அடுத்த இதழில் இந்தத் திட்டத்தைப் பற்றி விவரமாய் எழுதுகிறேன்.

காவிரிபூம்பட்டினம்
24—4—48

மணி